
JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

மலர்: 13 | இதழ்: 6 | ஆகஸ்ட் 2022 | ஆண்டு சந்தா ₹100/




# Eணைந்திடு

வாலிபர் உலகம்

# INDEX

அயல்நாட்டில் ஆண்டவரை அறிவிக்கும்... 04
கண்ணீரை மாற்றும் தேவன்! 12
எதையும் சாதிக்கலாம்! 16
தனிமை 33

**இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனி எங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!**

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன் SMS மூலமாகவோ Whats app மூலமாகவோ **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்

**வாலிபர்களே! உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகுந்த மாற்றத்தைக் கொண்டு வரும் இப்பத்திரிக்கையை நீங்கள் தவறாமல் வாசியுங்கள். நீங்கள் வாசித்தபின் இப்பத்திரிக்கையை உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கக் கொடுங்கள்!**

## 30,000 வாலிபர்கள் கையில் தவழும் வாலிபர் உலகம் பத்திரிகை உங்கள் கையில் உள்ளதா?

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் **சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்!** Mo/ Cheque / DD "Jesus Redeems Youth Ministry" **என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும். நீங்கள் பணம் செலுத்திய பின்பு, உங்களது பெயர், முகவரி மற்றும் ரசீதை 9750955547 என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்.**

| | |
|---|---|
| A/c. Name | : JESUS REDEEMS YOUTH MINISTRY |
| A/c. No. | : 054100710400515 |
| BANK | : TAMILNAD MERCANTILE BANK LTD., |
| BRANCH CODE | : Prahasapuram, Nazareth |
| BRANCH CODE | : 000054 |
| IFS CODE | : TMBL0000054 |
| MICR CODE | : 627060021 |
| SWIFT CODE | : TMBLINBBTUT |

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-353333
Cell:9750955547
youth@jesusredeems.org
www.jesusredeems.com
www.youthworld.in

**ஆசிரியர்:** மோகன் சி. லாசரஸ் **இணை ஆசிரியர்:** அவினாஷ் **ஆசிரியர் குழு:** ஜிஷ்யா | ரேச்சல் | கிளாடிஸ் ரவி | சுமா | கெத்சி | காலேப் | வயலா | சதீஷ் | ரேச்சல் செல்வகுமார்
**வடிவமைப்பு:** ஜாஷ்வா | **நிர்வாகம்:** பெனீட்டா | ஜெயா



# தலைவாசல்

அன்பான இளம் நெஞ்சங்களுக்கு! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

இன்றைய உலகம் அநேக நேரங்களில் இணைப்புகளைப் பற்றி பேசிக் கொண்டே இருக்கிறது. மனிதனை இணைப்பதற்கு பல சாதனங்கள் நடைமுறை வாழ்க்கையில் வரும் போது மக்கள் இணைவதற்கு அவை பெரிதும் உதவினாலும், இயல்பு வாழ்க்கையில் உறவுகளில் பல துண்டிப்புகளும், பிரிவுகளும் தான் வருகின்றது.

பலரும் Social media-வில் தங்களைப் பற்றிய பதிவுகளும், Personal Information Share செய்வதின் மூலம் பல குடும்பங்களில் குழப்பங்களும், பிரிவுகளும், விவாகரத்தும் நடந்து கொண்டே தான் இருக்கிறது என்று பல நாளிதழ்களும், பத்திரிக்கைகளும் கூறுகிறது. மேலும் வாலிப சமுதாயம் இப்படிப்பட்ட Online game-ல் இணைவதின் மூலம் படிப்பு மற்றும் வேலைகளில் கவனம் குறைவதால் கல்வியில் ஒரு துண்டிப்பு அவர்கள் மத்தியில் காணப்படுகிறது. ஆன்லைனில் இரவு முழுவதும் சீரியல் மற்றும் Web Series பார்த்து விட்டு வேலையில் கவனம் இல்லாமல் வேலை செய்வதால் பலர் தங்கள் வேலைகளை இழக்கின்றனர்.

இப்படி உலக வாழ்க்கையிலும், உலகத்தின் இன்பங்களிலும் இணைந்திருப்பதால் பலரின் வாழ்க்கையில் பல துண்டிப்புகளும், துன்பங்களும் தான் மிஞ்சுகிறது. தவறான இணைப்புகள் இன்றைய சமுதாயத்தில் தலை விரித்து ஆடுகிறது. ஆண், பெண் என்ற அழகிய உறவு மாறி, ஆணோடு ஆண், பெண்ணோடு பெண் என்ற தவறான உறவு உருவாகி வருகிறது. இன்றைய சூழலில் இந்த உறவு தான் தனித்துவம் என்று சிலரால் கருதப்படுவது வேதனையான ஒன்று இன்றைக்கு உலகம் பல தவறான இணைப்புகளில் இருப்பதால், மேலும் மேலும் தங்களை கெடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

மனிதன் தன்னை படைத்த தேவனை விட்டு விலகி செல்ல செல்ல, தவறும், பாவமும் அதிகரித்துக் கொண்டே தான் இருக்கும். இப்படிப்பட்ட சமுதாயத்தில் தான் நீங்களும் நானும் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். இவர்கள் இயேசுவோடு இணையும் போது தான் இரட்சிப்பு உண்டாகும்.



இவர்களுக்கும் இயேசு தேவை. இந்திய தேசத்தில் கடைசி இந்தியனும் இயேசுவை அறிய,

**நீ ஆசைப்படு! பிரயாசப்படு, இறுதிவரை பாடுபடு!**

நம் ஜனத்தின் கண் திறந்தால், அவர்களின் கண்ணீர் துடைக்கப்படும். இவர்கள் இயேசுவோடு இணைய உண்மையாய் செயல்படு!

கிறிஸ்துவின் பணியில்
அவினாஷ்

# அயல்நாட்டில் ஆண்டவரை அறிவிக்கும்...

சாட்சி: ஜிஷ்யா



சகோதரி ஜெஃப்லின் ஸ்டேனி

**சகோதரி ஜெஃப்லின் ஸ்டேனி ரோமன் கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்திருந்தாலும், இயேசு தான் தெய்வம் என்று அறிந்து அவரை ஏற்றுக்கொண்டு, இன்றைக்கு மருத்துவம் படித்துக் கொண்டே சுவிசேஷம் அறிவிக்க முடியாத தேசத்தில் சுவிசேஷம் அறிவித்து பலரை இரட்சிப்புக்குள் நடத்தும் வாலிப சகோதரியின் அனுபவத்தைக் கேட்கலாம்.**

### உங்களது குடும்பம் மற்றும் சிறுபிராயத்தைப் பற்றி சொல்லுங்களேன்?

நான் கன்னியாகுமரி மாவட்டத்தில், ஒரு ரோமன் கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்தேன். எனது தகப்பனார் Business செய்கிறார். எனது தாயார் இல்லத்தரசியாக இருக்கிறார்கள். எனது சகோதரி பல் மருத்துவம் படித்து முடித்துள்ளார். நான் 3வது வருடம் மருத்துவம் கிர்கிஸ்தான் (kyrgyzstan) தேசத்தில் படித்து வருகிறேன். நாங்கள் சிறுவயதிலிருந்தே நன்றாக படிப்போம். தேவன் எனக்கு சிறுவயதிலேயே நல்ல ஞானத்தையும் திறமையையும் கொடுத்திருந்தார். சிறுவயதிலிருந்தே எங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து நடக்கிற பிள்ளைகளாகத் தான் இருந்து வருகிறோம்.



### ஓகே... நீங்கள் ரோமன் கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்ததாக சொன்னீர்கள்... சிறுவயதிலேயே எப்படி வளர்க்கப் பட்டீர்கள்?

நான் ஒரு கத்தோலிக்க குடும்பத்தைச் சார்ந்தவள். என்னுடைய சிறு வயதில் எங்கள் குடும்பத்தின் கட்டாயத்தின் காரணமாக நாங்கள் கத்தோலிக்க சபைக்கு செல்வோம். ஆனால் எங்கள் குடும்பத்தில் நானும் என் தாயும், என் சகோதரியும் இணைந்து தினமும் குடும்ப ஜெபம் செய்வது வழக்கம். அப்பொழுது என் தாய் வேதம் வாசித்து அதை எங்களுக்கு போதிப்பார்கள். சிலை வழிபாடு செய்வது தவறு என்றும், நாம் இயேசுவை மட்டுமே வணங்க வேண்டும் என்றும் எங்களது தாயார் எங்களுக்கு சொல்லி வளர்த்தார்கள். அதனால் நாங்கள் சிலைவழிபாடு செய்வது இல்லை. அதன்பிறகு இயேசு தான் தெய்வம் என்று அறிந்து கொண்டோம். சிறு வயதில் இருந்தே என் கவலைகளை இயேசுவிடம் சொல்வேன். என் தகப்பனார் இரட்சிக்கப்பட வேண்டுமென்று ஜெபிப்பேன். சிறுவயதிலிருந்தே என் தகப்பனாருக்கு இயேசுவைப் பற்றி சொல்வேன். வேதத்தை வாசித்து ஜெபிக்க சொல்வேன். ஆனால் அவர் முழுமையாக இயேசுவின் அன்பை உணரவில்லை. அதனால் அவரின் இரட்சிப்புக்காக நாங்கள் குடும்பமாக ஜெபிப்போம். எங்கள் குடும்பத்தில் சமாதானம், சந்தோஷம் உண்டாக ஜெபிப்பேன். எங்கள் வீட்டில் அடிக்கடி சில ஊழியர்கள் வந்து ஜெபிப்பது வழக்கம். இதுதான் என் சிறுவயது கிறிஸ்தவ வாழ்க்கையாக இருந்தது.



### இயேசு தான் தெய்வம் என்று அறிந்தீர்கள்... அதன்பிறகு ஆவிக்குரிய சபைக்கு செல்ல ஆரம்பித்தீர்களா?

எங்கள் வீட்டில் ஊழியர்கள் வந்து ஜெபிக்கும் போது, எங்களுக்கும் அவர்களைப் போல பாடி துதிக்க, அந்நிய பாஷையில் ஜெபிக்க, வேதத்தை அதிகமாய் அறிந்து கொள்ள தொடர்ந்து ஜெபிக்க ஆரம்பித்தேன். அந்த நாட்களில் எங்களுக்கு ஆவியானவர் யார் என்று தெரியாது.

அந்நியபாஷை என்றால் என்ன என்று தெரியாது. வேதத்தைப் பற்றி ரொம்ப தெரியாது. நாங்கள் திறப்பின் வாசல் ஜெபத்திற்கு அடிக்கடி செல்வோம். அங்கு மோகன் அங்கிள் போதிக்கும் போதனைகளை கவனமாக கவனிப்போம். இந்நிலையில் குடும்ப ஜெபத்தில், நாங்களும் ஒரு ஆவிக்குரிய திருச்சபைக்கு செல்ல வேண்டும் என்று ஜெபிக்க ஆரம்பித்தோம். ஒரு சில வருடங்களில் தேவன் எங்கள் ஜெபத்தைக் கேட்டார். நானும் என் தாயும் என் சகோதரியும் ஆவிக்குரிய சபைக்கு செல்ல ஆரம்பித்தோம்.



**சூப்பர்... ஒருவழியாக ஆவிக்குரிய சபைக்கு சென்றீர்கள்... உங்களுடைய வாழ்க்கையில் மாற்றங்கள் ஏதும் ஏற்பட்டதா?**

சபைக்கு சென்ற பின்பு எனது ஆவிக்குரிய வாழ்க்கையில் அநேக மாற்றங்கள் உண்டாக ஆரம்பித்தது. ஆனால் உலகக் காரியங்கள் என்னை விட்டு மாறவில்லை. படம் பார்ப்பது, உலகப்பிரகாரமான நண்பர்களோடு பேசுவது, நேரத்தை வீணாக செலவழிப்பது போன்ற காரியங்கள் என் வாழ்க்கையில் இருந்து கொண்டே தான் இருந்தது. இந்த நிலையில் நான் பன்னிரண்டாம் வகுப்பு முடித்த பின்பு எனக்கு மருத்துவராக வேண்டும் என்று ஆசை இருந்தது. இதற்காக ஒரு ஆண்டு நீட் தேர்வுக்காக படித்தேன். எனக்கு ஒரு ஆண்டு படிக்க விருப்பம் இல்லை. ஆனால் என் தகப்பனார் சொன்னதினால் நீட் தேர்வுக்கு படித்தேன். நான் எதிர்பார்த்த மதிப்பெண் எனக்கு கிடைக்கவில்லை. மெரிட்டில் படிக்க எனக்கு வாய்ப்பில்லை. அதனால் பல் மருத்துவம் கலந்தாய்வில் கலந்து கொண்டேன். எனக்கு பல் மருத்துவம் படிக்க இடமும் கிடைத்தது. ஆனால் எனக்கு பல் மருத்துவம் படிக்க விருப்பம் இல்லை. வேறு வழியும் இல்லை. ஏனென்றால் எல்லாக் கல்லூரிகளிலும் வகுப்புகள் ஆரம்பித்து ஒரு மாதம் ஆகி விட்டது, மிகவும் சோர்ந்து போய், இனி என்ன செய்வது என்று தெரியவில்லை. என் வாழ்க்கை இனி அவ்வளவு தான் என்றெல்லாம் கூட யோசித்தேன். இந்த வேளையில் ஒருநாள் நான் ஜெபித்துக் கொண்டிருக்கும் போது, நான் வெளிநாட்டில் சென்று படிக்க செல்வதை போல ஒரு தரிசனத்தை தேவன் எனக்கு காண்பித்தார். அது நிறைவேறுவதற்கு சாத்தியமே இல்லை. ஆனால் ஒரு மாதத்தில் தேவன் அதை நிறைவேற்றி காண்பித்தார். வெளிநாட்டில் சென்று படிக்க எனக்கு வாய்ப்பு வந்தது. அங்கு சென்று எனது மருத்துவ படிப்பை படிக்க ஆரம்பித்தேன். நான் ஒரு வருடம் படித்து வீடு திரும்பிய போது, ஒருநாள் வீட்டில் மிகவும் பாரத்தோடு, துயரத்தோடு ஏன் என் வாழ்க்கை இப்படி ஆகிவிட்டது என்றும், ஏன் எனக்கு மெரிட்டில் இடம் கிடைக்கவில்லை என்றும், முதல் ஆண்டு படிப்பில் பட்ட பாடுகளையும் எண்ணி மிகவும் சோர்ந்து போய் உட்கார்ந்திருந்தேன்.

**ஓகே... சோர்ந்து போய் இருந்த நிலமையில் இருந்தீர்கள்... அந்த நேரத்தில் இயேசு உங்களை சந்தித்தாரா?**

ஊரடங்கு நாட்களில் ஆரம்பித்த 'ஜெபிக்கலாம் வாங்க' நிகழ்ச்சியை நான் பார்ப்பது உண்டு. ஆவியானவர் வரும் போது நாம் புது பெலன் அடைவோம், ஆவியானவர் நம் பெலவீனத்தில் பெலன் தருவார் என்று மோகன் அங்கிள் நிகழ்ச்சியில் சொன்ன வார்த்தைகள் என் நினைவில் வந்தது. அப்பொழுது நான் ஜெபிக்க ஆரம்பித்தேன். ஜெப வேளையில் தேவன் என்னை நிரப்புவதை என்னால் உணர முடிந்தது. அப்பொழுது மோகன் அங்கிள், ஜெபத்தை விடாதீர்கள், தொடர்ந்து தனித்து ஜெபியுங்கள், தேவன் நவமான பாஷையைக் கொடுப்பார் என்று சொன்னார்கள். அதன்படி நான் ஜெபிக்க ஆரம்பித்தேன். சில நிமிடங்களில் என்னால் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு ஆவியானவர் என்னை நிரப்பினார். என் இருதயத்தில் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் உணர்ந்தேன். எனக்குள் ஒரு புதுபெலன், புது உற்சாகம் வந்தது. ஒரு வருடத்திற்கு முன்பு, எந்த இடத்தில் நான் வாழ்வது வீண் என்று அழுது புலம்பிக் கொண்டிருந்தேனோ, அதே இடத்தில் இயேசு என் வாழ்க்கையை மாற்றினார். அன்று இரவு உன் துக்க நாட்கள் முடிந்தது என்றும், உன் வீட்டில் சமாதானத்தைக் கட்டளையிடுவேன் என்றும் தேவன் என்னோடு பேசினார். அதன் பிறகு என் வாழ்க்கையே மாறிவிட்டது. எனக்கு புதுபெலன், புதுநம்பிக்கை வந்தது.

**சூப்பர்... இயேசுவை சந்தித்தீர்கள்... அதன்பிறகு உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் என்ன?**

2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வாலிபர்களுக்கான Igniters Camp பற்றி மோகன் அங்கிள் அறிவித்தார்கள். நானும் அதில் கலந்துக் கொண்ட முதல் நாளில் தேவன் என்னோடு இடைபட்டார். அப்பொழுது தான், எதற்காக தேவன் என்னை வெளிநாட்டில் (KYRGYZSTAN) படிக்க வைத்தார் என்று உணர்ந்து கொண்டேன். முகாம் முடிந்த பிறகு அநேக மாற்றங்களைப் பார்க்க முடிந்தது. எனக்குள் காணப்பட்ட உலகப்பிரகாரமான காரியங்கள் என்னை விட்டு மாய்ந்து போனது. இப்பொழுது தேவன் என் வாழ்க்கையில் அநேக மாற்றங்களைக் கொடுத்து, எனக்குள் ஜெப ஆவியை ஊற்றினார்.



இந்திய தேசத்திற்கும், KYRGYZSTAN தேசத்திற்கும் நாங்கள் ஒருசிலராக இணைந்து ஜெபித்து வருகிறோம். நான் எனது சிறுவயதில் என் பெற்றோரிடமும் என் சகோதரியிடமும் அதிக நேரம் செலவழிப்பது வழக்கம். இதனால் அநேக நேரங்களில் எனக்கு குடும்ப அன்பு தான் முக்கியம் என்று யோசித்துள்ளேன். ஆனால் எப்பொழுது நான் இயேசுவின்







சிலுவை அன்பை அறிந்தேனோ, அன்றைய தினத்திலிருந்து என் பெற்றோரோ, என் சகோதரியோ அந்த இடத்தை நிரப்ப முடியாது என்பதை உணர்ந்து கொண்டேன். இயேசு எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல், நிரந்தர அன்பை கொடுப்பவர் என்பதை அறிந்து கொண்டேன்.

அதுமட்டுமல்லாமல் எந்த இடத்திலும் ஜனங்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க தேவன் பயன்படுத்தி வருகிறார். நான் 3வது ஊரடங்கு முடிந்து வெளிநாட்டில் படிப்பதற்காக வந்த போது, வாலிபர்கள், சிறுவர்கள், பெரியவர்கள் என அநேகருக்கு தேவ வார்த்தைகளை அறிவிக்க கிருபை செய்து வருகிறார். நான் எப்படி சுவிசேஷம் அறிவிக்க வேண்டும் என்று இயேசு எனக்கு கற்பித்து கொடுத்தார். நான் வெளிநாட்டில் படிக்க சென்றபோது ஒருநாளும் என் பெற்றோரையோ, சகோதரியையோ பார்க்க வேண்டும் என்று நினைத்து பார்த்தது இல்லை. ஏனென்றால் இயேசு எனக்கு துணையாக இருந்தார். நான் சோர்ந்து போகிற வேளைகளில் கர்த்தர் வார்த்தையினால் என்னை தேற்றுவார். அத்தேசத்தில் Russian மற்றும் Kyrgyz மொழி பயன்படுத்துவார்கள். அது எனக்கு மிக தெளிவாகத் தெரியாது. ஆனால் இயேசு எனக்கு ஒவ்வொரு வார்த்தையையும் கற்பித்து கொடுத்து என்னை பேச வைப்பார். நான் பிரயாணப்படுகிற வேளைகளில் எல்லாம் என்னோடு கூட இருந்து நடத்தி செல்வார். உலகப்பிரகாரமான நண்பர்களோடு நட்பு வைக்காமல், நல்ல நண்பர்களை கொடுத்தார். என் பெலவீன வேளைகளில் நல்ல மருத்துவராக இருந்து பெலன் தருவார். கடினமானப் பாடங்களையும் படிக்க எனக்கு ஞானத்தை தருவார். நான் தனியாக இருக்கிறேன் என்று ஒருநாளும் வருத்தப்பட்டதில்லை. எனக்கு தகப்பனுக்கு தகப்பனாய், தாய்க்குத் தாயாக, நண்பருக்கு நண்பராக என்னை வழிநடத்துவதை ஒவ்வொருநாளும் என்னால் உணர முடியும். ஒன்றுக்கும் உதவாத என்னைத் தேடி வந்து, அபிஷேகித்து சுவிசேஷம் அறிவிக்க முடியாத இடங்களுக்குக்கூட சென்று சுவிசேஷம் அறிவிக்க தேவன் என்னை பயன்படுத்தி வருகிறார்.





**தூப்பர்... படிக்கிற இடத்தில் கர்த்தருக்காக வைராக்கியமாக ஊழியம் செய்து வருகிறீர்கள்... இதை படித்துக் கொண்டிருக்கும் வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

என்னை மாற்றின இயேசு நிச்சயமாக உங்கள் வாழ்க்கையில் காணப்படும் அடிமைத்தனங்களை மாற்றுவார். உங்களுக்கு சமாதானம், சந்தோஷம் தந்து உங்களை அநேகருக்கு பயன்படுத்தி மேன்மைபடுத்துவார். ஆனால் நீங்கள் செய்ய வேண்டியது, கர்த்தருக்காக வைராக்கியமாய் எழும்பி அவர் பணியை செய்ய வேண்டும். கர்த்தர் அதைத் தான் வாலிபர்களாகிய நம்மிடம் எதிர்பார்க்கிறார். இந்த எழுப்புதலின் நாட்களில் கிடைக்கிற நேரத்தை வீணாக்காமல் ஆத்துமாக்களை ஆதாயம் செய்யுங்கள். கர்த்தர் உங்களையும் மேன்மையாக வைப்பார்.

**அன்பான வாலிபர்களே! நீங்கள் கூட இன்றைக்கு நான் விரும்பின Course கிடைக்கவில்லையே என்று சோர்ந்து போய் இருக்கலாம். அன்பு சகோதரி ஜெ.ஃப்லின் ஸ்டேனியின் விசுவாசமுள்ள ஜெபத்தினால் கர்த்தர் அவர்களுடைய ஆசையை நிறைவேற்றி இன்றைக்கு அவர்கள் விரும்பின படிப்பை படிக்க தேவன் கிருபை செய்து வருகிறார். நீங்களும் தொடர்ந்து ஜெபியுங்கள்! நீங்கள் விரும்பினபடி உங்களுக்கும் செய்து உங்களையும் மேன்மைபடுத்துவார்! ●**

# JOEL
# யோவேல்
## (யெகோவாவின் நாளின் வருகை)

அன்பான இளம் நெஞ்சங்களே! இந்த மாதம் சிறிய தீர்க்கதரிசன நூல்களில் இரண்டாவது புத்தகமான "யோவேல்" பற்றிய சுவாரஸ்யமான காரியங்களை சுருக்கமாக காணலாம். யோவேல் என்பதற்கு யெகோவா தேவனாயிருக்கிறார் என்பது அர்த்தமாகும்.

## அறிமுகம்

வருங்காலத்தில் கர்த்தருடைய நாளில் இஸ்ரவேல் ஆக்கிரமிக்கப்படும் என்பதைக் குறித்த எச்சரிப்பைக் கொடுப்பதற்காக யூதாவில் ஏற்பட்ட பஞ்சத்தையும், வெட்டுக்கிளிகளின் தாக்குதலையும் யோவேல் பயன்படுத்துகிறார். மிகக் குறைந்த நேரத்தில், ஒருசில மணி நேரங்களுக்குள்ளாக இந்த வெட்டுக்கிளிகள் எல்லாத் தாவரங்களையும் அழித்துவிட்டன. தேசமானது மனந்திரும்பி கர்த்தரிடம் திரும்பினால், தேவன் அதோடு தமது உறவைப் புதுப்பித்து, அதை ஆசீர்வதிப்பார் என்று யோவேல் சொல்கிறார்.

ஆசிரியர்: யோவேல்
காலம்: கி.மு. 835
அதிகாரங்கள்: 3
வசனங்கள்: 73
வார்த்தைகள்: 2, 034
முக்கிய நபர்கள்: யோவேல்

## யோவேல் - சுருக்கம்

### சரித்திரத்தில் கர்த்தருடைய நாள்

- சரித்திரத்தில் வெட்டுக்கிளிகளினால் அழிவு (1:1-12 வசனங்கள்)
- சரித்திரத்தில் வறட்சி ஏற்படுதல் (1:13-20 வசனங்கள்)

### தீர்க்கதரிசனத்தில் கர்த்தருடைய நாள்

- யூதாவின் சிறையிருப்பு பற்றிய தீர்க்கதரிசனம் (2:1-11 வசனங்கள்)
- யூதாவின் இரட்சிப்புக்கு அவசியமானவை (2:12-27 வசனங்கள்)
- கர்த்தர் வருவதற்கு முன்னய நாளின் நிகழ்ச்சிகள் (2:28-32 வசனங்கள்)
- கர்த்தரின் நாளில் நடக்கும் காரியங்கள் (3:1-21 வசனங்கள்)

## யோவேலில் கிறிஸ்து

- கிறிஸ்துவானவர் பரிசுத்த ஆவியை ஊற்றுபவராகவும் (2:28; யோவான் 16:7-15 வசனங்கள்)
- தேசங்களை நியாயந்தீர்ப்பவராகவும் (3:2-12 வசனங்கள்)
- இஸ்ரவேலருக்கு அடைக்கலங்கொடுப்பவராகவும்

இருப்பதாக சித்தரிக்கப்பட்டுள்ளார் (3:16 வசனம்)

Heart Beat



# மாத்தியோசி...

ஆலோசனை: அலி

நான் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் எல்லா பாடத்திலும் 95% எடுப்பேன் என்று நம்பிக்கையாக இருந்தேன். Hard work பண்ணி மிகவும் நன்றாக படித்து எழுதினேன். ஒரு பக்கம் அப்பா உடல்நிலை சரியில்லை, மறுபக்கம் பணம் நெருக்கடியாக இருந்தும் கடினமாக படித்தேன். ஆனால் Result வந்த போது 85% மதிப்பெண் எடுத்திருந்தது. எனக்கு மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. என்னால் என் கனவான டாக்டர் படிப்பை படிக்க முடியாதோ என்று சோர்ந்து போய் விட்டேன். ஆனால் மருத்துவத் துறையில் பல படிப்புகள் உள்ளன என்று என் நண்பர்கள் சொல்கிறார்கள். ஆனால் என்னால் MBBS படிக்க முடியவில்லையே என்ற வருத்தத்தினால், மற்ற எந்த படிப்பும் படிக்க மனமில்லை. ஒரு மருத்துவராகி ஏழை ஜனங்களுக்கு சேவை செய்யும் எண்ணத்தோடு என் படிப்பை தொடர்ந்தேன். ஆனால் எல்லாம் கலைந்து போன கனவாகி விட்டது. மற்றொருப் பக்கம் வேறு எந்த கல்லூரிக்கும் நான் விண்ணப்பிக்காததால், எனக்கும் என் பெற்றோருக்கும் இடையே உள்ள பிரச்சனையால், வீட்டில் நிம்மதியே இல்லை. மேலும் மதிப்பெண் குறைந்ததால், நீ சரியாக படிக்கவில்லை, நீ எங்களை ஏமாற்றிவிட்டாய் என்று நாள்தோறும் என்னை திட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பக்கம் கனவு அடைய முடியவில்லையே என்ற வேதனை, மறுபக்கம் என் பெற்றோரின் கோபமும், எரிச்சலும் நாளுக்கு நாள் என்னை மன அழுத்தத்திற்குள் தள்ளுகிறது. எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை - ஜெனி, தேனி.

சேவை புரியும் இடம், ஏழை ஜனங்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற குறிக்கோளோடு நீங்கள் மருத்துவம் படிக்க முற்பட்டது பாராட்டத்தக்கது.

அன்பு சகோதரி ஜெனி! உங்களின் ஏக்கமும், ஏமாற்றமும் நன்கு புரிகிறது. மேலும் பெற்றோரின் வேதனைபடுத்தும் வார்த்தைகள், உங்களது மன வேதனையை அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்பதை நன்கு புரிந்துக் கொள்ள முடிகிறது.

ஜெனி! மருத்துவர் என்ற உங்களின் கனவு மிக சிறந்தது. நான் அதை பாராட்டுகிறேன். மேலும் மருத்துவராகி ஏழை-எளிய மக்களுக்கு உதவ நினைப்பது சால சிறந்தது. இன்றைக்கு மருத்துவம் ஒரு வியாபாரம் ஆகிவிட்ட நிலையிலும், மருத்துவம்



ஆனால் மருத்துவராக முடிய வில்லையே என்று நீங்கள் வருந்தலாம்; ஆனால் மருத்துவ படிப்பு படிக்க முடியாது என்று சோர்ந்து போக வேண்டாம். உங்கள் நண்பர்கள் சொல்வது போன்று MBBS மட்டும் மருத்துவப் படிப்பு அல்ல; பல மருத்துவப் படிப்புகள் உள்ளது. ஏழை - எளிய மக்களுக்கு

உங்களால் முடிந்த மருத்துவ உதவி செய்ய வாய்ப்பு ஏராளம் உண்டு என்பதே உண்மை. எனவே சோர்ந்து போகாமல் மருத்துவப் படிப்பில் என்ன படிப்பு உள்ளது என்று surf பண்ணி பாருங்கள். நீட் தேர்வு இல்லாமலும் மருத்துவப் படிப்பு இப்பொழுது ஏராளமாக உள்ளது. உங்கள் கனவுக்காக இதுவரை எடுத்த அதே முயற்சியை, உங்கள் கனவு நிறைவேற கடும் முயற்சி செய்யுங்கள். முயன்றால் முடியாதது ஒன்றும் இல்லை.



**ஜெனி! ஒருவேளை மருத்துவராக முடிய வில்லை, ஆனால் மருத்துவத் துறையில் சாதிப்பேன் என்று நீங்கள் முயற்சித்தால் என்ன நன்மைகள் கிடைக்கும் என்று யோசித்து பாருங்கள்!**

- உங்களுடைய நீண்ட நாள் கனவு நிறைவேறும்.
- உங்கள் ஆசையின்படி பல ஏழை-எளியவர்களுக்கு உதவலாம்.
- உங்கள் படிப்பை தொடர்ந்ததால், உங்கள் பெற்றோரின் மனதில் மறுபடியும் சந்தோஷம் உண்டாகலாம்.
- இந்த படிப்பினால் சண்டைகள் மாறி, சமாதானத்தோடு நிம்மதியாக வீட்டில் இருக்கலாம்.
- உங்கள் மன அழுத்தம், சோர்வு மாறி ஒரு புது பொலிவுடன் ஜெனி வலம் வரலாம்.
- MBBS மட்டும் படிப்பு அல்ல, மருத்துவத் துறையிலும் பல படிப்புகள் உள்ளன. அவற்றை திறமையாக படித்து வாழ்க்கையில் சாதித்த முதல் பெண்மணி என்ற பெயரும் கிடைக்க வாய்ப்பு உண்டு.
- எதிர்காலத்தில் நீங்கள் சொந்த மருத்துவமனை ஒன்று கட்டி, பல டாக்டர்களை பணி அமர்த்தலாம். இப்படி அநேக நன்மைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

**ஒருவேளை இந்த படிப்பை தொடராமல், வீட்டில் சோர்வுற்று இருந்தால் என்ன நடக்கும்?**

- வீட்டில் உள்ள குழப்பமும், சண்டையும் அதிகமாகும்.
- உங்களுடைய மன அழுத்தம் அதிகமாகி மன நோயினால் பாதிக்கப்பட வாய்ப்பு உண்டு.
- உங்கள் பிடிவாதத்தால் உங்கள் தந்தையின் சுகவீனம் மேலும் பாதிக்கப்பட வாய்ப்பு உண்டு.
- உங்கள் நண்பர்கள் மற்ற படிப்பு படித்து மேலே உயர்ந்து போகும் போது, என்னால் முடியவில்லையே என்ற வருத்தம் அதிகமாகும்.
- உங்கள் சோர்வினால் நீங்கள் தவறான முடிவு எடுக்கும் வாய்ப்பும் உண்டு.

தீர்மானம் உங்கள் கையில் தான் இருக்கிறது. உங்கள் வாழ்க்கைக்கு நீங்கள் விளக்கேற்ற போகிறீர்களா? அல்லது நீங்களே உங்கள் விளக்கை அணைக்கப் போகிறீர்களா? யோசித்து முடிவு எடுங்கள்.

உங்களைப் போல Cross Road-ல் நின்று திகைக்கும் அத்தனை வாலிபர்களுக்கு உதவி செய்யவும், உறுதுணையாய் உடன் நடந்து வந்து உதவி செய்ய இயேசு ஒருவர் உண்டு. அவர் உங்கள் வாழ்க்கையில் உள்ள சோர்வை மாற்றி, நம்பிக்கை தந்து சாதிக்க உதவி செய்வார்.

**இயேசு நிச்சயம் உங்களுக்கு உதவி செய்து, நிச்சயம் சிகரம் தொடும் அளவிற்கு வெற்றி தருவார்!** ●



முகப்பு செய்தி: சதீஷ்

# இணைந்திடு!

இன்றைய வாலிபர்களுக்கு பெரும் சவாலாக இருப்பது தனிமையை மேற்கொள்வதுதான். ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வின் ஏதாவது ஒரு சூழ்நிலையில் தனிமையை உணரலாம். தனிமை என்பது யாருக்கும் தானே வருவதில்லை. ஒன்று, நம்மை நாமே தனிமைப்படுத்திக் கொண்டிருப்போம் அல்லது மற்றவர்களால் தனிமைப்படுத்தப்பட்டிருப்போம். கைகளில் ஸ்மார்ட்போன், வாட்ஸ்–அப், பேஸ்புக், இன்ஸ்டாகிராம், ட்விட்டர் என நேரத்தை செலவழிக்கும் சமூக வலைத்தளங்கள் பல இருந்தும், இன்னும் ஏராளமான வாலிபர்கள் தனிமை உணர்விலிருந்து வெளியே வரமுடியவில்லை என்று இருப்பது ஆச்சரியமூட்டும் தகவலாகவே இருக்கிறது.



கூண்டில் அடைத்து வைத்து வளர்க்கப்படும் மிருகங்களை விட, காட்டில் சுதந்திரமாக வளரும் மிருகங்கள் புஷ்டியாகவும், நுண்ணறிவோடும் இருப்பதைப் பார்க்க முடிகிறது. கூண்டில் அடைத்து வைத்து வளர்க்கப்படும் மிருகங்களுக்கு என்னதான் சத்தான உணவு, நல்ல இயற்கை சூழ்நிலை போன்றவற்றை அமைத்துக் கொடுத்தாலும் அவைகள் தனிமையில் தான் வாடுகின்றன. இதைபோலவே ஒருவருக்கு வாழத் தேவையான வசதிகள், நல்ல ஆரோக்கியமான சூழ்நிலை இவை எல்லாம் இருந்தும் தனிமையை உணர்கின்ற மனிதன் கூண்டில் அடைக்கப்பட்ட மிருகத்தைப் போலவே இருக்கிறான்.

பெரும்பாலான குற்றங்கள் தனிமையில் இருக்கும்போது தான் நடக்கின்றன. கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்ற தாவீது இராஜா யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், யுத்தத்திற்கு செல்லாமல் தனிமையில் இருந்ததுதான் பாவத்தில் விழுந்து போவதற்கு காரணமாக இருந்தது. இன்றைக்கும் பெரும்பாலான வாலிபர்கள் சமூக வலைத்தளங்களிலும், இரகசியப் பாவத்திலும் விழுந்து போவது தனிமையில் இருக்கும்போது தான். ஒருவேளை தாவீது தனியாக இல்லாமல் தன் குழுவோடு யுத்தத்திற்கு போய் இருந்தால், துணிகரமாக பாவத்தை செய்யாமல் தவிர்த்து இருக்கலாம். சாத்தான் நம்முடைய தனிமையை பயன்படுத்தி நம்மை பாவத்தில் விழ வைப்பான். எனவே



தனிமையை தவிர்ப்பது நல்லது. ஆகவே எக்காரணத்தைக் கொண்டும் தனிமையில் இருக்காதீர்கள். தனிமையில் பாவம் செய்யும் எண்ணங்கள் வரும்போது, அந்த இடத்தை விட்டு விலகி ஓடுவது நல்லது.

ஒரு சிலருக்கு தன்னைச் சுற்றி எவ்வளவு நண்பர்கள் இருந்தாலும் தனிமையை உணருவார்கள். என்னை நேசிக்க ஒருவரும் இல்லை, எல்லோரும் என்னை வெறுக்கிறார்கள் என்று தங்களைத் தாங்களே தனிமைப்படுத்திக் கொள்வார்கள். உங்களைச் சுற்றி எவ்வளவு நண்பர்கள் இருக்கிறார்கள் என்பது முக்கியமல்ல,

எப்படிப்பட்ட நண்பர்கள் இருக்கிறார்கள் என்பதே முக்கியம். பாவம் நிறைந்த பாபிலோன் தேசத்தில் தானியேலுக்கு நல்ல ஆவிக்குரிய ஜெபிக்கிற நண்பர்கள் இருந்ததால் தான், நல்ல வெற்றியுள்ள வாழ்க்கை வாழ முடிந்தது. நல்ல நண்பர்களைத் தேர்வு செய்து அவர்களுடன் உங்கள் நேரங்களை செலவிடும் போது தனிமை உணர்வுகளை மேற்கொள்ளலாம். ஒருசிலர் தன் நண்பர்களுடன் இருக்கும்போது மிகுந்த மகிழ்ச்சியோடு இருப்பார்கள், தனிமையை உணராது இருப்பார்கள். நண்பர்களை விட்டு விலகும் போது தனிமையை உணருவார்கள். எப்போதும் நண்பர்கள் நம்முடன் இருப்பதில்லை. ஆனால் நம்மை



விட்டு எப்போதும் விலகாத ஒரு நண்பர் இருக்கிறார், அவர் தான் இயேசு கிறிஸ்து. சில நேரங்களில் நம்மை நேசிக்கிற நல்ல நண்பர்கள் கூட நம்மை விட்டு விலகி விடுவார்கள். இயேசு எப்போதும் நம்மை விட்டு விலகாதவர், நம்மை கைவிடாதவர்.

மோசேயின் தலைமையில் எகிப்திலிருந்து கானானை நோக்கி புறப்பட்ட இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்துகிற மிகப்பெரிய பொறுப்பை ஆண்டவர் யோசுவாவிடம் கொடுக்கிறார். ''என் தாசனாகிய மோசே மரித்துப்போனான்; இப்பொழுது நீயும் இந்த ஜனங்கள் எல்லாரும் எழுந்து, இந்த யோர்தானைக் கடந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு நான் கொடுக்கும் தேசத்துக்குப் போங்கள்'' (யோசுவா 1:2) என்றார். மோசேயோடு இருந்து ஜனங்களை வழிநடத்தின அனுபவம் யோசுவாவிற்கு இருந்தாலும், இப்பொழுது மோசே இல்லையே என்ற தனிமை ஒரு பக்கமும், மேலும் தனி ஒரு மனிதனாக இந்த ஜனங்களை நான் எப்படி வழிநடத்த முடியும் என்ற பயம் இன்னொரு பக்கமும் அவருக்குள் இருந்திருக்கலாம். அதனால்தான் ஆண்டவர் யோசுவாவைப் பார்த்து சொல்கிறார், யோசுவா நீ தனி ஆள் கிடையாது, ''...நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்;



நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை'' (யோசுவா 1:5) என்றார். இந்த வார்த்தைக்குப் பின்பு யோசுவா நான் தனியாக இல்லை, கர்த்தர் என்னோடு இணைந்து இருக்கிறார் என்ற உணர்வுடன் ஜனங்களை வழிநடத்த ஆரம்பிக்கிறார். ஆண்டவர் யோசுவாவோடு இணைந்து நின்றதால் தான் அவர் எல்லா யுத்தங்களிலும் வெற்றி சிறந்தவராக இருக்க முடிந்தது. ஆண்டவர் எப்பொழுதும் நம்முடன் இணைந்து நிற்கத்தான் விரும்புகிறார். ஆனால் இன்றைக்கு இருக்கும் சமூக வலைத்தளங்கள் மற்றும் உலக சிநேகம் போன்றவற்றால் நாம் இயேசுவுடன் இணைந்து இருக்க



முடியாமல் அவரை விட்டு விலகி தனித்து இருக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படுகிறோம். நீங்களே யோசித்துப் பாருங்கள் ஒரு நாளைக்கு செல்போனுடன் இணைந்து இருக்கிற அளவிற்கு நீங்கள் இயேசுவோடு இணைந்து இருக்கிறீர்களா?

*எனக்கன்பான வாலிப தம்பி, தங்கச்சி! ஒருவேளை நீங்கள் கூட என்னை சுற்றி எத்தனையோ நண்பர்களும், சமூக வலைத்தளங்களும் இருந்தாலும், நான் எப்போதும் தனியாக இருக்கிறேன் என்ற தனிமை உணர்வுடன் இருக்கலாம். இல்லை, நான் தனிமையில் இருக்கும்போது குறிப்பிட்ட பாவ பழக்கத்தை, விட முடியாமல் பல வருடங்களாக தவித்து வருகிறேன், என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கலாம், எது எப்படியோ நீங்கள் தனி ஆள் இல்லை, "...நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்" (யோசுவா 1:9) என்பதை நீங்கள் மறந்து விடாதீர்கள். நீங்கள் இயேசுவோடு இணைந்து நின்றால் போதும் எப்படிப்பட்ட சூழ்நிலை உங்கள் வாழ்க்கையில் வந்தாலும் அதை எளிதாக வென்றுவிடலாம்* ●



செய்தி: மோகன் சி. லாசரஸ்



# கண்ணீரை மாற்றும் தேவன்!

ஒரு சமயம் நான் மதுரைப் பட்டணத்திற்கு போயிருந்த போது, ஒரு வாலிபன் தனியாக பேச வேண்டும் என்று வந்தான். அவனை தனியாக அழைத்து பேசின போது, அவன் கண்களில் கண்ணீர் வடிந்தது. கல்லூரியில் படிக்கிற ஒரு வாலிபன் அழுகிறான். என்ன உன்னுடைய பிரச்சனை என்று கேட்டேன். என்னால் படிக்கவே முடியவில்லை, என்னால் பாடத்தில் கவனம் செலுத்தவே முடியவில்லை என்று சொன்னான். எதனால் என்று கேட்கும் போது; என் அப்பா, என் அம்மா மீது சந்தேகப்பட்டு எப்போதும் கடின வார்த்தையினால் திட்டிக் கொண்டே இருப்பார், என் அம்மா அழுதுக் கொண்டே இருப்பார்கள், நான் பாடப்புத்தகத்தை திறந்தால் கண்ணீரோடு இருக்கிற என் தாயின் முகம் தான் தெரிகிறது. என்னால் படிக்க முடியவில்லை. என் தகப்பனார் மனம் மாற நீங்கள் ஜெபம் செய்கிறீர்களா? என்று ஒரு வாலிபன் கண்ணீரோடு என்னிடத்தில் கேட்டான்.



இன்றைக்கு சிறுபிள்ளைகள், வாலிபர்கள், குடும்பத்திலுள்ளவர்கள், வயதானவர்கள் என யாரைக் கேட்டாலும் கண்ணீர், கண்ணீர். கண்ணீர் இல்லாத மக்களை காண்பது அரிதாயிருக்கிறது. நீங்கள் கூட வெளியே தெரியக்கூடாது

‘‘என் அலைச்சல்களை தேவரீர் எண்ணியிருக்கிறீர்; என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்; அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது? (சங். 56:8). தாவீது என்ற ஒரு பக்தன், ஒரு தேசத்திற்கு இராஜாவாக உயர்த்தப்பட்டிருந்த போதியிலும், ஆண்டவர் மேல் அளவில்லாத அன்பும், விசுவாசமும் வைத்திருந்தார். ஆனால் அவர் கடந்து வந்த பாதையெல்லாம் கண்ணீரின் பாதையாக இருந்தது. பெலனில்லாமல் போகுமட்டும் எத்தனையோ முறை அழுதார், கண்ணீர் வடித்தார். நான் வடிக்கிற கண்ணீர் வீணாகப் போவதில்லை என்பதை அவர் அறிந்தும் வைத்திருந்தார். நான் சிந்துகிற கண்ணீரை அவர் கணக்கு வைக்கிறார், அவர் துருத்தியில் சேர்த்து வைக்கிறார் என்பதை அவர் அறிந்திருந்தார். அதனால் தான், என் அலைச்சல்களை நீர் எண்ணியிருக்கிறீர், என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும், அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது என்று சொல்கிறார். இன்றைக்கு கண்ணீர் வடிக்காத மக்களை காண்பது அரிதாயிருக்கிறது. ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் ஏதோ ஒரு காரியத்தைக் குறித்த துக்கம் உள்ளத்தை அழுத்தும் போது, அந்த துக்கம் கண்ணீராக வெளிப்படுகிறது.



என்பதற்காக இரவு நேரம் படுக்கையில் கண்ணீரினால் நனைத்துக் கொண்டிருக்கிறீர்களா? கர்த்தரின் கண்கள் உங்களை நோக்கிப் பார்க்கிறது. கர்த்தர் உங்கள் கண்ணீரை துருத்தியில் சேர்த்து வைக்கிறார். கர்த்தருக்கு முன்னால் உங்கள் கண்ணீர் விலையேறப் பெற்றது. இந்த மகள் இன்றைக்கு இந்த காரியத்திற்காக இத்தனை சொட்டு கண்ணீர் வடித்திருக்கிறாள். இந்த மகன் இன்றைக்கு இந்த காரியத்திற்காக இத்தனை சொட்டு கண்ணீர் வடித்திருக்கிறான் என்று ஆண்டவர் கணக்கு வைத்திருக்கிறார் என்று வேதம் சொல்கிறது. என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வைத்திருக்கிறீர், அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது? நான் எவ்வளவு வேதனையில் கண்ணீர் வடிக்கிறேன் உமக்கு தெரியுமோ என்று தாவீது கதறுகிறார். இன்றைக்கு நீங்கள் கூட அப்படி இருக்கிறீர்களா? நீங்கள் கண்ணீர் வடிப்பதை பார்த்து விட்டு அமைதியாயிருக்கிற தேவன் அல்ல. என் மகள் அழுகிறாளே! என் மகன் அழுகிறானே! நான் அற்புதம் செய்ய வேண்டுமென்று பரிதபிக்கிற ஒரு தேவன். கண்ணீரை களிப்பாய் மாற்றுகிற தேவன், இன்றைக்கு உங்களுடைய கண்ணீரை துடைக்கும்படி ஒரு அற்புதம் செய்யப் போகிறார்.

வேதப்புத்தகத்தில் கண்ணீர் வடித்த மக்களுக்கு தேவன் எப்படி அவர்களோடு பேசி, கண்ணீரை துடைத்தார். கண்ணீரான வாழ்க்கையை எப்படி மாற்றினார் என்று அநேக சம்பவங்கள் எழுதப்பட்டிருக்கிறது. 1 சாமு.1:1ம் வசனத்தை வாசிக்கும் போது, அன்னாள் என்கிற ஒரு பெண், தேவ சமூகத்தில் போய் மனங்கசந்து மிகவும் அழுது, கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணினாள் என்று வேத வசனம் சொல்கிறது. இவள் ஏன் கண்ணீர் வடித்தாள்? குழந்தை இல்லை என்கிற துக்கம் அவளுக்குள் இருந்தது. அவள் கணவர் அவளை நேசித்தார். கணவர் அன்பு அவளைத் தேற்றினாலும், கூட இருக்கிறவர்கள் அவளுக்கு குழந்தை இல்லாததை சுட்டிக் காண்பித்து, அவளை காயப்படுத்திக் கொண்டே இருப்பார்கள். 1 சாமு. 1:6,7ம் வசனங்களில் சொல்கிறது, கடினமான வார்த்தைகளை சொல்லி அவளைக் காயப்படுத்தி வேதனைப்படுத்துவார்கள். அவள் சாப்பிடாமல் அழுதுக் கொண்டே இருப்பாள். ஆகையால் அவள் வாழ்க்கையே கண்ணீராகி விட்டது. எப்பொழுதும் அவள் துக்க முகத்தோடு அழுது கொண்டே இருப்பாள்.

நான் சாப்பிடாமல் உட்கார்ந்து அழுது, அழுது என்ன பிரயோஜனம்? நான் கர்த்தரிடத்தில் போகிறேன், அவரால் எனக்கு குழந்தையை தரமுடியும், அவர்தான் என் நிந்தையை மாற்ற முடியும் என்று எழுந்து புறப்பட்டு தேவாலயத்திற்கு போய் அவர் பாதத்தில் நின்று வெகுநேரம் மனங்கசந்து அழுதுக் கொண்டிருந்தாள். அன்னாளை கர்த்தர் நினைத்தருளினார் (1 சாமு. 1:19). தேவன் அவள் கண்ணீரை கண்டார் என்று வேதம் சொல்கிறது. என் சமுகத்தில் வந்து மகள் அழுகிறாள் என்று தேவன் உடனே மனதுருகினார். சாமுவேல் என்ற மகனைக் கொடுத்தார். அதன் பிறகு, மூன்று குமாரர்கள், இரண்டு குமாரத்திகள் என்று ஆறு குழந்தைகளைக் கொடுத்து கர்த்தர் ஆசீர்வதித்தார். எந்த இடத்தில் அவமானப்படுத்தப்பட்டு, நிந்திக்கப்பட்டு, வேதனைப்படுத்த பட்டாளோ, அதே மக்களுக்கு மத்தியில் தேவன் அவளை தலைநிமிர்ந்து நடக்கப் பண்ணினார். நீங்கள் மனுஷரிடத்தில், கணவரிடத்தில், நண்பர்களிடத்தில், உறவினர்களிடத்தில் கண்ணீர் வடிக்கிறதினால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. உங்களுக்கு அந்த நேரம் ஆறுதலான வார்த்தை சொல்வார்களேத் தவிர அவர்களால் அற்புதம் செய்ய முடியாது. உங்கள் கண்ணீரைப் புரிந்து கொள்ளுகிற கர்த்தரிடத்தில் வந்து கண்ணீர் வடிக்கும்போது, உடனே அவர் அற்புதம் செய்வார்.



**அன்பான வாலிபர்களே! இன்றைக்கு நீங்கள் கூட படிப்பைக் குறித்து, எதிர்காலத்தைக் குறித்து அழுதுக் கொண்டிருக்கிறீர்களா? கண்ணீரை மாற்றும் தேவன் உங்களோடு இருக்கிறார். அன்னாளின் நிந்தையை மாற்றி அவளை நினைத்தருளின தேவன் உங்களையும் நினைத் தருள்வார். கர்த்தருடைய பாதத்தில் சென்று அழுது ஜெபியுங்கள். உங்கள் கண்ணீரை மாற்ற இயேசுவால் முடியும் என்று விசுவாசத் தோடு ஜெபியுங்கள். கண்ணீரை ஆனந்த களிப்பாக மாற்றுவார்! ஆமென்!!** ●

புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

வேதாகமத்தில் உள்ள சில உவமைகளின் வாக்கியங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வாக்கியம் இடம் பெற்றுள்ள உவமையைக் கண்டறிந்து விடையை வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.

1. கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள்.
2. என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன்.
3. மகனே, நீ போய் இன்றைக்கு என் திராட்சைத்தோட்டத்தில் வேலை செய்.
4. வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று.
5. நிதானமாய் உத்தரவு சொன்னாய்; அப்படியே செய், அப்பொழுது பிழைப்பாய்.
6. கேளுங்கள், அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்.
7. நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு.
8. பெண்ணை விவாகம்பண்ணினேன், அதினால் நான் வரக்கூடாது.
9. கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான்
10. வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்.

பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15. 08. 2022

கடந்த மாத விடைகள்

1. மனமகிழ்ச்சி முகமலர்ச்சியைத் தரும் (நீதி. 15:13)
2. ஞானிகளோடே சஞ்சரிக்கிறவன் ஞானியாவான் (நீதி. 13:20)
3. திருட்டுத் தண்ணீர் தித்திக்கும் (நீதி. 9:17)
4. சேறில்லாமல் நாணல் ஓங்கி வளருமோ? (யோபு 8:11)
5. பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்துப் போவார்கள் (மத். 26:52)
6. அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை (நீதி. 16:18)
7. அநியாயத்தை விதைக்கிறவன் வருத்தத்தை அறுப்பான் (நீதி. 22:8)
8. அறிவு பெருத்தவன் நோவு பெருத்தவன் (பிரசங்கி 1:18)
9. ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று (மத். 21:42)
10. ஆண்டவர் என்றென்றைக்கும் கைவிடமாட்டார் (புலம்பல் 3:31)

கடந்த மாத வெற்றியாளர்

கெப்சி, மதுரை

அவர்களை வாழ்த்துகிறோம்.

Jesus Redeems Youth Ministries,
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535.
eMail: youth@jesusredeems.org

வேதாகமத்தில் பறவைகள்

# தீக்கோழி
## (OSTRICH)



நிகழ்வு கெத்சி கிளார்வின்

**வேதாகமத்தில் லேவி. 11:16; உபா. 14:15; புல. 4:3; யோபு 39:13 ஆகிய வசனங்களில் தீக்கோழி என்னும் வார்த்தையை நம்மால் பார்க்க முடிகிறது. தீக்கோழிகள் தங்கள் செட்டையை அசைவாட்டி ஓடுகிற வேகமான ஓட்டம் பற்றி வேதாகமத்தில் சொல்லியிருக்கிறது (யோபு 39:13).**

இவ்வுலகில் வாழும் பறவைகளில் மிகப்பெரிய பறவை தீக்கோழியாகும்.

ஆண் தீக்கோழி 2.5 மீட்டர் உயரம் வரை வளரும். பெண் தீக்கோழி சற்று சிறியதாகும்.

இவை 120 முதல் 300 கிலோ வரை எடையுடையது, மேலும் வேகமாக ஓடவும் கூடியது. ஆனால் இவை பறக்க முடியாத பறவை ஆகும்.

இதன் தனித்துவம் என்னவென்றால் மணிக்கு 50 கிலோ மீட்டர் முதல் 72 கிலோ மீட்டர் வரை வேகமாக ஓடக்கூடியது.

தீக்கோழியின் ஆயுள் காலம் சராசரியாக 45 ஆண்டுகள்.

**இப்பேற்பட்ட தீக்கோழியின் அதிவேக ஓட்டத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியவைகளை இம்மாதப் பகுதியில் நாம் காண்போம்!**

தீக்கோழி பறவை தனது ஓடும் திறனினால் தன்னை தாக்க வரும் சிங்கம், புலி போன்ற காட்டு மிருகங்களிலிருந்து காத்துக்கொள்ளும் ஆற்றல் கொண்டது.

தீக்கோழி பறவை  நேர்நிலையாக ஓடும்போது மட்டுமே மற்ற விலங்குகளிடமிருந்து தப்பிக்க முடியும்.

ஆனால் இப்பறவைகளை காட்டு மிருகங்கள் தாக்க வரும்போது நேராக ஓடுவதை மறந்து, வட்டமிட்டு ஓட ஆரம்பிக்கும். அதினால் இப்பறவையின் வேகம் குறைந்து சுலபமாக மற்ற மிருகங்களுக்கு இரையாகி விடும்.

**அன்பு வாலிபர்களே! இயேசுவையே நோக்கி நோக்கத்தோடு ஓட தீர்மானியுங்கள்; வாழும் வழியை கண்டடைவீர்கள்!**

‘‘நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன்’’ (பிலிப்பியர் 3:12) என்று பவுல் சொன்னது போல், **இயேசு எதற்காக உங்களை பிரித்தெடுத்தெடுத்தாரோ, அதைப் பிடித்துக் கொண்டு ஓட, ஆசையாக இயேசுவைப் பின்தொடருங்கள்!**



**இதை வாசித்துக் கொண்டிருக்கும் அன்பு வாலிபர்களே!**

உங்களது வாழ்வின் ஓட்டம் எப்படிப்பட்டதாய் இருக்கிறது?கடினமான சூழ்நிலையின் மத்தியில், பிரச்சனைகள் சூழ்ந்திருக்கும் வேளைகளில், நேர் ஓட்டமாய் சிலுவையின் அண்டை ஓடி, இயேசுவின் பாதத்தை அண்டிக் கொள்ளுகிறீர்களா? அல்லது தேவனை சாராமல் சுயமாய் தப்பிக்க வழி தேடி மரணத்தின் வாசலுக்கு நேராய் செல்ல முயற்சிக்கிறீர்களா?

# எதையும் சாதிக்கலாம்!



சாதனை: சுடா

**இளம் சாதனையாளர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள். நமக்கு வரும் ஒவ்வொரு தோல்விகளையும், தடைகளையும், அவமானங்களையும் மிகப் பெரிய மலையாக நாம் நினைத்தால் இந்த மிகப்பெரிய மலைக்குப் பின்னால் இருக்கும் நம்முடைய வெற்றியுள்ள வாழ்க்கையை நாம் காணவே முடியாது. நாம் இந்த மலையைப் பார்த்து பயப்படுகிறவர்களாக இல்லாமல், அதின் மேல் தடம் பதித்து வெற்றி காண்கிறவர்களாக இருக்க வேண்டும். அப்படி தடம் பதித்த வெற்றியாளரின் வாழ்க்கை உங்களுக்காக...**

மனிதர்களாகிய நமக்கு வெவ்வேறு கனவுகள் இருக்கும். அதேபோலத் தான் இளம் வயதான பூஜா அகர்வாலுக்கும் தன்னுடைய வாழ்க்கையைப் பற்றி நிறைய கனவுகளுடன், தனது 27வது வயதில் கல்லூரிப் பேராசிரியராக மகிழ்ச்சியுடனும், பல கனவுகளை மனதில் கொண்டு நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருந்தார். இந்நிலையில் தான், கனவில் கூட நினைத்துப் பார்க்க முடியாத மிகவும் கொடிதான நிகழ்வு பூஜாவின் வாழ்க்கையில் நிகழ்ந்தது.



2012ம் ஆண்டு டிசம்பர் மாதம் புதுடெல்லி இரயில் நிலையத்திற்கு பூஜாவும் இவரின் கணவரும் சென்றனர். பூஜாவின் கணவர் வெளியூருக்குப் போவதால் இருவரும் இரயில் நிலையம் சென்றனர். பூஜாவும், கணவரும் வேக வேகமாக பரப்பரப்பு நிறைந்த இரயில் நிலையத்தில் நடந்துக் கொண்டு இருந்தனர். இரயில் நிலையத்தில் கூட்ட நெரிசல் அதிகமாக இருந்தது. கூட்ட நெரிசலில் சிக்கிய பூஜா யாரும் நினைத்துப் பார்க்காத நேரத்தில் நடைமேடையில் இருந்து தண்டவாளத்தில் விழுந்தார். வேகமாக வந்து கொண்டிருந்த இரயில் பூஜாவின் மேல் ஏறியது. இந்த விபத்தில் பூஜாவின் உயிர் தப்பியது. ஆனால் இவரது கை, கால்களில் உள்ள மூன்று மூட்டுகள் துண்டிக்கப்பட்டன. வலது கையை மட்டுமே அவரால் செயல்படுத்த முடிந்தது.

திடீரென்று ஏற்பட்ட விபத்தால் பூஜாவின் வாழ்க்கை ஒன்றும் இல்லாமல் போனது. இனி என்ன செய்வது என்று தெரியாமல் கலங்கி நின்றார் பூஜா. தன்னையே சமாதானப்படுத்திக் கொண்ட பூஜா, வாழ்க்கையின் எதார்த்தத்தை உணர்ந்தார். இனி எனக்கு கை இல்லை, கால் இல்லை என்று நினைப்பதை விட்டு விட்டு நமக்கு முன்பாக இருக்கும் வாழ்க்கையை வாழத் தயாரானார். எப்படியாவது ஒரு வேலை தேடி சுயமாக சம்பாதிக்க வேண்டும் என்பதே பூஜாவின் எண்ணமாக இருந்தது. எனவே அரசாங்கத் தேர்வுகளுக்கு தன்னை தயார்படுத்திக் கொள்ள ஆரம்பித்தார். விடா முயற்சியுடன் படிக்கத் தொடங்கினார். விடா முயற்சியின் விளைவாக Bank of Allahabad (Indian Bank)-ல் 2014ம் ஆண்டு வேலையில் சேர்ந்தார்.

நடந்த கொடூர விபத்தில் இருந்து மீண்ட பூஜா மெல்ல மெல்ல தன்னுடைய வாழ்க்கையில் சந்தோஷத்தை மீட்டு எடுக்க ஆரம்பித்தார். பூஜாவின் தோழி பூஜாவை விளையாட்டில் கவனம் செலுத்தும்படி ஆலோசனை கூறினார். ஆனால் பூஜா என்னால் எப்படி இது முடியும் என்று சிரித்தார். பின்னர் தன்னுடைய தோழியின் அறிவுரையால் ஒருநாள் Indian Spinal Injuries Centre-க்கு சென்றார். அங்கு இருந்தவர்கள் சக்கர நாற்காலியில் மிகவும் சந்தோஷமாக கூடைப்பந்து விளையாடிக் கொண்டிருந்ததை பூஜா பார்த்ததும், பூஜா டேபிள் டென்னிஸ்

விளையாட ஆர்வம் கொண்டு டேபிள் டென்னிசை கற்க ஆரம்பித்தார். பிறகு பாரா தடகள வீரர்களுக்கு துப்பாக்கி சுடுதல் விளையாட்டை அறிமுகப் படுத்தும் முகாமில் கலந்துக் கொண்ட பிறகு பூஜாவிற்கு துப்பாக்கி சுடுதல் மிகவும் பிடித்துப் போனது. எனவே துப்பாக்கி சுடுவதை கற்றுக் கொள்ளவும் ஆரம்பித்தார். மிகவும் சோகம் நிறைந்த பூஜாவின் வாழ்க்கை வங்கி வேலை, டேபிள் டென்னிஸ், துப்பாக்கி சுடுதல் என பரபரப்பாகி விட்டது.




ஒருநாள் வங்கியில் வேலை செய்து கொண்டிருக்கும் போது, திடீரென்று வங்கியில் மயங்கி விழுந்தார். பூஜாவை பரிசோதித்த மருத்துவர்கள் உடல் நிலை மிகவும் பலவீனமாக உள்ளதால் ஏதாவது ஒரு விளையாட்டின் மேல் கவனம் செலுத்துங்கள் என்று அறிவுரை கூறினார்கள். எனவே பூஜா துப்பாக்கி சுடுதலை தேர்ந்தெடுத்தார். பூஜா துப்பாக்கி சுடுதல் பயிற்சியை மேற்கொள்ள தினமும் 40 கி.மீட்டர் தூரம் சென்று பயிற்சியை மேற்கொள்ளுவார். தேசிய அளவிலான போட்டிக்கு தயார்படுத்திக் கொண்டிருக்கும் சமயத்தில் பூஜாவின் அப்பா இறந்து விட்டார். அத்தனை துக்கங்களையும் சுமந்துக் கொண்டு 2016ம் ஆண்டு நவம்பர் மாதம் 8ம் தேதி தங்கப் பதக்கம் வென்றார்.

**சக்கர நாற்காலியில் இருந்தாலும், பாரா தடகள வீராங்கனை தனது கனவுகளை தொடர்வதை தடுக்கவில்லை.**

பூஜா துப்பாக்கி சுடுதலில் அதிக பதக்கங்களை பெற்றிருந்தாலும் அவரிடம் சொந்தமாக துப்பாக்கி இல்லை. கடனாக தான் துப்பாக்கி வாங்கி போட்டியில் பங்கேற்றிருந்தார். இதன் பிறகு பூஜா வங்கியில் கடன் வாங்கி சொந்தமாக துப்பாக்கியை வாங்கினார். பிறகு பாங்காக் சாம்பியன்ஷிப்பில் வெற்றி பெற்றார். ஆசிய விளையாட்டு போட்டிகளில் தகுதி பெற்றார். குரோஷியா (Croatia) உலகக் கோப்பையில் வெண்கலப் பதக்கம் பெற்றார். 2021ம் ஆண்டு ஜுன் மாதம் பெரு நாட்டில் நடைபெற்ற உலகக் கோப்பை போட்டியில் குழுவாக விளையாடும் பிரிவில் இரண்டு வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றார். இன்று நம்முன் சாதனையாளராக வலம் வருகிறார்.




பூஜாவின் வாழ்க்கையில் நடந்த ஏதோ ஒரு நிகழ்வு நம்முடைய வாழ்வில் நடைபெற்று இருந்தால் நாம் என்ன செய்திருப்போம்? புலம்பி அழுது குறைகளை மட்டுமே பெரிதாக நினைத்து தோல்வி, கஷ்டம் என்று மலையைத் தாண்ட முடியாமல், இந்த மலை இவ்வளவு பெரியது என்று புலம்பிக் கொண்டு இருப்போமா? அல்லது அந்த மலையின் மேல் ஏறி வெற்றிக் கொடியை நாட்டி இருப்போமா?

**மனிதர்களாகப் பிறந்த எல்லாருடைய வாழ்விலும் தோல்விகள், எதிர்பாராத கொடிய நிகழ்வுகள் வரத்தான் செய்யும். எதையும் பார்த்துக் கொள்ளலாம், நாம் தான் சாதிக்க பிறந்தவர்கள் என்று எண்ணி துணிந்து செயல்பட்டால் வெற்றி நிச்சயம் உங்களுக்கே! ●**

## யாக்கோபு - தனிமையில் பெற்ற ஆசீர்வாதம்!



சிந்தனை சிதறல்: ரெபேக்கா

தன் சகோதரனாகிய ஏசாவை இரண்டு முறை ஏமாற்றி ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொண்டதால், ஏசா கோபங்கொண்டு யாக்கோபை பழிவாங்க நினைப்பதை அறிந்த ரெபேக்காள், ஏசாவின் கைக்கு தப்புவிக்க, பதான் ஆராமிலிருக்கிற அவன் மாமன் வீட்டிற்கு அனுப்பி வைத்தாள். யாக்கோபு பெற்றோரைப் பிரிந்து, இளம் வயதில் பதான் ஆராமிற்கு தனித்து போய், அறியாத தேசத்தில் தனிமையில் விடப்பட்டான். அநேக வருடங்களுக்குப் பிறகு தனது குடும்பம், சொத்துக்களுடன் தன் சொந்த தேசத்திற்கு திரும்பி வருகிறான். இப்பொழுதும் தன் சகோதரன் தன்னுடன் கோபமாக இருப்பான் என்று பயந்த யாக்கோபு, தன்னை எதிர்கொண்டு வரும் ஏசாவுக்காக பல பரிசுகளை அனுப்பினான். இராத்திரியில் தன் குடும்பத்தை யாப்போக்கு என்ற ஆற்றை கடக்கப்பண்ணி அக்கரைப்படுத்தினான். யாக்கோபு இக்கரையில் தனித்திருந்தான். ஏசாவுக்கு பயந்து தனித்திருந்த போது, நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மை போகவிடேன் என்று இராமுழுதும் விழித்திருந்து ஜெபித்தான். கர்த்தர் அவனின் விடாப்பிடியான ஜெபத்தை கேட்டு யாக்கோபை இஸ்ரவேலாக ஆசீர்வதித்தார். அந்த ஜெபத்தின் விளைவாக ஏசா எதிர்கொண்டு வந்து அவனைத் தழுவி முத்தம் செய்தான். யாக்கோபு தனிமையில் ஆண்டவரோடு போராடி ஆசீர்வாதத்தைப் பெற்றான் (ஆதி. 32, 33).

**அன்பான வாலிபர்களே! தனிமைதான் நமக்கு பல்வேறு அனுபவங்களைக் கற்றுக் கொடுக்கும், யாக்கோபு தனிமையில் இருந்த போது தான் இயேசுவோடு போராடி ஜெபித்து, என்றைக்கும் இழக்க முடியாத பெரிய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டான். நீங்களும் தனிமையில் கர்த்தரோடு இணைந்திருங்கள்! ஆசீர்வதிக்கப்படுவீர்கள்!**



## தாவீது - தனிமையில் செய்த பாவம்!

ஒரு மாலைப்பொழுதில் அரண்மனையின் உப்பரிகையில் உலாவிக் கொண்டிருந்த போது, கீழே ஒரு அழகான பெண்ணைப் பார்த்தார். அவளைப் பார்த்த பின்பு தாவீதின் மனதில் அமைதி இல்லை. அந்தப் பெண்ணைப் பற்றி விசாரித்த போது, அவள் உரியாவின் மனைவி பத்சேபாள் என்பதை அறிந்து கொண்டார். இன்னொருவன் மனைவி என்று தெரிந்தும் அவள் மேல் ஆசை கொண்டார். தனிமையில் இருந்த தாவீது பத்சேபாளை தன் அரண்மனைக்கு வரவழைத்தார். தனிமையான நேரத்தில் தாவீது பத்சேபாளோடு பாவம் செய்தான். தாவீது அந்த பாவத்தை மறைக்க முயற்சி செய்தார். போர் நடக்கும் இடத்தில் உரியாவை முன்நிறுத்தி, போரில் உரியா இறக்கிறார். பத்சேபாளை தாவீது திருமணம் செய்தார். இது கர்த்தரின் பார்வைக்கு பொல்லாததாயிருந்தது. கர்த்தர் நாத்தான் தீர்க்கதரிசியை அனுப்பி ஒரு கதையின் மூலமாக அவன் செய்த பாவத்தை எடுத்து சொன்னதும், தாவீது மனம் உடைந்து, கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்து விட்டேன் என்று தன் பாவத்தை அறிக்கையிட்டார். தாவீது செய்த இந்த தவறால் தாவீதுக்கும் அவருடைய குடும்பத்துக்கும் நிறைய இழப்புகள் வந்தது. தாவீது கர்த்தருக்கு பிரியமானவனாக இருந்தார். ஆனால் தனிமையில் இருந்த போது அவரால் அந்த பாவத்தை மேற்கொள்ள முடியாமல் போனது (1 சாமு. 11, 12).

**அன்பான வாலிபர்களே! நீங்கள் தனிமையில் இருக்கும் போது எப்படி இருக்கிறீர்கள். கர்த்தருக்கு பிரியமானதை செய்கிறீர்களா? அல்லது தேவனுக்கு பிரியமில்லாத பாவத்தை செய்து தாவீதை போல எல்லாவற்றையும் இழக்கப் போகிறீர்களா? தனிமையை தவிர்த்து, தேவனோடு இணைந்திருங்கள்! பாவத்தை மேற்கொள்ளலாம்!**



## ஏவாள் - தனிமையில் வந்த ஏமாற்றம்!

ஆதாமை ஏதேன் தோட்டத்தில் வைத்து தோட்டத்தை பண்படுத்தவும் காக்கவும் வைத்தார். ஒருநாள் ஆதாம் பழங்களை பறித்து வர சென்றிருந்தான். ஏவாள் தனியாக இருந்ததை அறிந்த சாத்தான், அவளது தனிமையை பயன்படுத்திக் கொண்டான். எந்த மரத்தின் பழத்தை சாப்பிடக் கூடாது என்று தேவன் சொன்னாரோ, அந்த மரத்தின் கனியை சாப்பிடும்படி சர்ப்பம் ஏவாளிடம் சொன்னது. விலக்கப்பட்ட மரத்தின் பழத்தை சாப்பிட்டால் நீங்கள் கடவுளைப் போல ஆக முடியும் என்று ஏமாற்றி புசிக்க வைத்தான். அவள் சாப்பிட்டது மட்டுமின்றி ஆதாமுக்கும் அதை சாப்பிடக் கொடுத்தாள். உடனே அவர்கள் கண்கள் திறக்கப்பட்டது. வெட்கமும் பயமும் அவர்களை ஆட்கொண்டது. சாயங்கால வேளையில் இயேசு வருவதை அறிந்து, ஓடி ஒளிந்து கொண்டார்கள். ஆதாம், ஏவாளை குறை கூறினான். ஏவாள், பாம்பை குறை கூறினாள். அவர்களது விளக்கத்தை ஏற்றுக்கொள்ளாத தேவன் அவர்களை ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியே அனுப்பினார் (ஆதி. 3).

**அன்பான வாலிபர்களே! தனிமையில் இருக்கும் போது சாத்தான் தந்திரமாக ஏவாளை ஏமாற்றி ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியே அனுப்பினான். அதுபோலதான் நீங்களும் தனிமையில் இருக்கும் போது தந்திரமாக பேசி பாவம் செய்ய வைத்து ஆசீர்வாதத்தை இழக்க வைப்பான். எனவே தேவனோடு இணைந்திருங்கள்! ஏமாற்றத்தைத் தவிர்க்கலாம்!**

## தானியேல் - தனிமையில் பெற்ற வெற்றி!



தானியேல் என்ற வாலிபன் மற்றவர்களைவிட திறமைசாலியாக இருந்ததால் பாபிலோன் தேசத்துக்கு அதிகாரியாக வைத்தான். அத்தேசத்தார் தானியேலைப் பார்த்து பொறாமைப்பட்டார்கள். அவரை ஒழித்துக் கட்ட வேண்டுமென்று, தரியுவிடம் உங்களைத் தவிர வேறு தெய்வத்தை வணங்க கூடாது என்று ஒரு சட்டம் போட வேண்டும், அதை மீறினால் அவர்களை சிங்கக்குகையில் போட வேண்டும் என்ற சட்டம் போட வைத்தார்கள். இராஜா அந்த சட்டத்தை நிறைவேற்ற கையெழுத்துப் போட்டான்.

தானியேல் அந்த சட்டத்தைக் கேள்விப்பட்டதும், தான் முன்பே செய்கிறபடி மூன்று வேளையும் ஜெபம் செய்தார். இதை பொறாமைக்காரர்கள் இராஜாவிடம் சொன்னார்கள். இராஜா சட்டத்தில் கையெழுத்து போட்டதால் அவரால் அதை மாற்ற முடியாது. வேறு வழியில்லாமல் தானியேலை சிங்கங்கள் இருக்கிற குகைக்குள் போடச் சொன்னார். அன்று இரவு முழுவதும் தானியேல் தனிமையில் சிங்கக்கெபியில் ஜெபித்துக் கொண்டிருந்தார். இராஜா தானியேலிடம், உன் கடவுள் உன்னை காப்பாற்றினாரா என்று கேட்டார். அதற்கு தானியேல் தேவன் தம்முடைய தூதனை அனுப்பி சிங்கங்களின் வாயை அடைத்து விட்டார், அவை என்னை ஒன்றும் செய்யவில்லை என்று தரியு இராஜாவிடம் சொன்னார். அவர் உடலில் சின்னக்கீறல் கூட இல்லை (தானி. 6).

**அன்பான வாலிபர்களே! சிங்கக்கெபியில் போட்ட போதும் தனிமை என்ற உணர்வு இல்லாமல், அங்கேயும் அவர் ஜெபித்தார். கர்த்தர் தேவ தூதர்களை அனுப்பி, சிங்கங்களின் வாயை கட்டிப் போட்டார். நீங்களும் தனிமையான சூழ்நிலைகள் வரும் போது இயேசுவோடு இணைந்திருங்கள்! வெற்றி நிச்சயம்!**

ஊழிய பயணம் வயலா

# பேதுருவின் கேள்வித் திறன்

Petra

பேதுருவோடு ஒரு பயணம்...

பகுதி-7

### என்னைத் தொட்டது யார் என்று எப்படி கேட்கிறீர்?

இரத்தப்போக்கினால் மிகவும் பாடுபட்ட பெண், தனது செல்வத்தையெல்லாம் மருத்துவத்திற்காக செலவழித்தும் சற்றும் குணமடையாத நிலையில் யாரோ ஒருவர், இயேசுவின் வஸ்திரத்தைத் தொட்டதால் சுகம் கிடைக்கிறது என்று சாட்சி சொல்லி இருக்கிறார். கூட்டத்தில் யாருக்கும் தெரியாமல் வந்து இயேசுவின் வஸ்திரத்தின் ஓரத்தை தான் தொட்டாள்; என்ன ஆச்சரியம்! உடனே அவளது பெரும்பாடு நின்று விட்டது. அப்பொழுது இயேசு என்னைத் தொட்டது யார் என்று வினவுகிறார். இயேசு ஒரு கேள்வி கேட்டால், அதில் ஏதேனும் காரியம் இருக்கும் என்று நெருங்கிய சீடரான பேதுரு அறிந்திருக்க வேண்டும். ஆனால் எப்பொழுதும் போல் செயல்பட்ட பின்னரே சிந்திப்பவராய் இருந்தார் பேதுரு. திரளான ஜனங்கள் உம்மைச் சூழ்ந்து நெருக்கிக் கொண்டிருக்க, என்னைத் தொட்டது யார் என்று எப்படி கேட்கிறீர்? கூட்ட நெரிசலில் இது சகஜம் தானே என்று அனைத்து சீஷர்கள் சார்பிலும் கேள்வி கேட்டார் பேதுரு (லூக்கா 8:45). ஆனால் இதன் பின்னணியில் ஒரு ஸ்திரீயின் மாபெரும் விசுவாசம், அதை அவள் செயல்படுத்திய விதம், அவளுக்கு நிகழ்ந்த மகத்தான அற்புதம், பயந்த சுபாவம் உடைய அந்த ஸ்திரீயின் வாயாலே திரள் கூட்டமான மக்கள் முன் இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது போன்ற காரியங்கள் பேதுருவின் கேள்வியாலே யாவருக்கும் வெட்ட வெளிச்சமானது.



### யாரிடத்தில் போவோம்?

ஒருமுறை இயேசு தன் 12 சீஷர்களிடம் நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்று ஒரு கேள்வி கேட்டார் (யோவான் 6:67). தன்னுடைய சீஷர்களில் ஒருவர் தன்னுடைய ஆதி விசுவாசத்தை விட்டுத் தன்னைக் காட்டிக் கொடுப்பார் என்பதை இயேசு அறிந்திருந்தார். இயேசு காட்டிக் கொடுக்கப்படுவார் என்ற நிகழ்ச்சி மாத்திரம் தான் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டிருந்தது. ஆனால் நித்திய காலத்திலேயே யார் காட்டிக் கொடுப்பார் என்பது தீர்மானிக்கப்படவில்லை. எனவே தனது 12 சீஷர்களிடம் பொதுவாக இந்தக் கேள்வியை இயேசு கேட்கிறார். எப்பொழுதும் சீஷர்களின் வாயாக காணப்படும் பேதுரு தான் இப்பொழுதும் பதிலளிக்கிறார். ஆண்டவரே யாரிடத்தில் போவோம்? உம்மைத் தவிர எங்களுக்கு வேறு யாரும் இல்லை. ''...நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்'' (யோவான் 14:6) போன்ற இயேசுவின் வார்த்தைகளை முழுமையாய் விசுவாசித்து, அது அவருக்கு இன்பமாய் இருந்ததினால் ''...யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே. நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம்'' (யோவான் 6:68,69) என்று கேள்வியும் கேட்டு பதிலும் கூறிவிடுகிறார்.

### இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்?

இயேசு தேவாலயத்துக்கு எதிராக ஒலிவ மலையின் மேல் உட்கார்ந்து இருக்கையில் பேதுரு, யாக்கோபு, யோவான், அந்திரேயா அவரிடத்தில் தனித்து வந்து, இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? தேவாலயத்தின் கட்டிடங்கள் ஒரு கல்லின்

மேல் ஓர் கல் இராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டு போகும் என்றீரே, இவைகளெல்லாம் நிறைவேறுங்காலத்துக்கு அடையாளம் என்ன? எங்களுக்கு சொல்ல வேண்டும் என்று கேட்கிறார்கள். உடனே இயேசு ஏராளமான எச்சரிக்கைகளை இங்கு கூறுகிறார். கடைசிக் காலத்தின் அடையாளங்களைக் கூறி சமயத்தின் பேரால் ஏமாற்றி வஞ்சிப்பவர்களைக் குறித்து அதிக விழிப்புடன் இருக்க கூறுகிறார். மேலும் விழித்திருந்து ஜெபிக்கவும், முடிவு பரியந்தம் நிலைத்து நிற்கவும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்ற கிறிஸ்தவ வாழ்வின் இன்றியமையாத போதனைகளை கிறிஸ்து இங்கு கூறுகிறார். அதிக கேள்வி கேட்பவர்கள். அதிக ஞானமுள்ளவர்கள் என்று வல்லுனர்கள் கூறுவதைக் கேட்டிருப்பீர்கள். அதுபோல இங்கும் பேதுருவின் கேள்விகள் ஞானத்தின் ஊற்றாய் யாவருக்கும் பிரயோஜனப்படுகிறது.





### பேதுருவின் நினைவு திறன்

இயேசு பெத்தானியாவிலிருந்து திரும்பி வருகையில் வெறும் இலைகளை மாத்திரம் வைத்துக் கொண்டு கனியில்லாத அத்தி மரத்தைக் காண்கிறார். இனி ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியைப் புசியாதிருக்கக்கடவன் என்று கூறுகிறார். அதை அவருடைய சீஷர்கள் கேட்டார்கள் (மாற்கு 11:14). மறுநாள் காலையில் அவர்கள் அவ்வழியாய் போகும் போது அந்த அத்திமரம் வேரோடே பட்டுப்போயிருக்கிறதைக் கண்டார்கள். பேதுரு மாத்திரம் இயேசுவின் வார்த்தைகளை நினைவுகூர்ந்து இயேசுவிடம் கூறுகிறார். இயேசுவும் விசுவாசத்துடன் கூறும் வார்த்தைகளுக்கு உள்ள ஆற்றலை விவரிக்கிறார். மனித சொற்களுக்கு ஆற்றல் உள்ளதால் யாரையும் சபியாதிருக்கும்படி வேத வார்த்தை கூறுகிறது (ரோமர் 12:14). இருப்பினும் கனியற்ற கிறிஸ்தவ வாழ்க்கை சபிக்கப்பட்டது என்பது மறைக்க முடியாத உண்மை.



### பேதுருவின் மனத்தாழ்மையும் ஒப்புக் கொடுத்தலும்!

சீமோன் பேதுரு மீன் பிடித்தொழிலாளியாய் இருந்து போது தனது படகை இயேசு உட்கார்ந்து ஜனங்களுக்கு போதகம் பண்ணும்படி விட்டுக் கொடுக்கிறார் (லூக்கா 5:3). போதகத்தை முடித்தப் பின் சீமோன் பேதுருவிடம் ஆழத்தில் தள்ளிக் கொண்டுப் போய் மீன் பிடிக்கும்படி வலைகளைப் போடுங்கள் என்றார். இராமுழுதும் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை என்று தன் தோல்வியை ஒப்புக்கொண்டார் பேதுரு. இருப்பினும் தனது அனுபவ அறிவைப் பொருட்படுத்தாமல் ஆண்டவரின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து, இயேசு கூறியப்படி பின்னர் தான் இயேசுவை குறித்து பிரம்மித்து, பயந்து இயேசுவின் பாதத்தில் விழுந்து தன்னுடைய தாழ்மையை வெளிப்படுத்தி, ஆண்டவரே நான் பாவியான மனுஷன், நீர் என்னை விட்டு போக வேண்டும் என்று வேண்டுகிறார். இயேசு, சீமோன் பேதுருவிடம், பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரை பிடிக்கிறவனாய் இருப்பாய் என்று கூறியவுடன், தாங்கள் அன்று பிடித்திருந்த மீன்களை எல்லாம் விற்றுப் பணம் சம்பாதிக்கும் எண்ணத்தை உதறித் தள்ளி விட்டு இயேசுவை உடனே பின்பற்றினார்.

### இயேசு பேதுருவின் பாதத்தை கழுவுதல்!

யோவான் சுவிசேஷத்தில் மட்டும் வரும் தனித்தன்மை மிக்க நிகழ்ச்சியாக இயேசு சீடர்களின் பாதங்களை கழுவும் சம்பவம் கூறப்பட்டுள்ளது (யோவான் 13:3-15). பழைய ஏற்பாட்டுக் காலத்திலும், யூதர்கள் மத்தியிலும் பாதங்களை கழுவும் பழக்கம் உண்டு. விருந்தினரை கனப்படுத்துவதற்கும், தங்களை தூய்மைப் படுத்துவதற்கும், அடிமைகள் எஜமான்களை கனப்படுத்துவதற்கும் அடையாளமாக பாதங்களைக் கழுவுவர் (ஆதி. 18:4, 19:2; லூக்கா 7:44). இங்கே இயேசு கிறிஸ்து தன்னை ஒரு அடிமையைப் போலத் தாழ்த்தி சீடர்களின் கால்களைக் கழுவுகிறார். எப்பொழுதும் போல் மற்ற சீஷர்கள் அமைதியாய் அனுமதித்த போது, பேதுரு மட்டும் ஆண்டவரே நீர் ஒருக்காலும் என் கால்களை கழுவக் கூடாது என்கிறார். தன்னைவிட கிறிஸ்து உயர்ந்தவர் என்ற பேதுருவின் எண்ணத்தை அறிய முடிகிறது.

**இன்னும் பல முக்கிய சம்பவங்களுடன் பேதுருவோடு ஓர் பயணம் தொடரும்.**

# ஜெபக் கையேடு

ஆகஸ்ட் 2022

1 உலகம் முழுவதும் சுமார் 30 மில்லியன் மக்கள் கொத்தடிமைகளாக இருக்கிறார்கள். இந்த கொத்தடிமைகள் மீட்கப்பட ஜெபிப்போம்.

2 உலகில் உள்ள கொத்தடிமைகளில் பாதி பேர் அதாவது 13.9 மில்லியன் பேர் இந்தியாவில் இருப்பதாக கருத்துக் கணிப்பு கூறுகிறது. கொத்தடிமைகள் இல்லாத தேசமாக மாற ஜெபிப்போம்.

3 அநேக கொத்தடிமைகள் கடினமான வேலையான கல்குவாரிகள், உலைகளில் வேலை செய்யப்படுவது தடுத்து நிறுத்தப்பட ஜெபிப்போம்.

4 தங்களது கடனை அடைப்பதற்காக கொத்தடிமைகளாக கட்டாயமாக வேலை செய்யும் நிலையில் இருப்பவர்களின் சூழ்நிலையை கர்த்தர் மாற்றும்படி ஜெபிப்போம்.

5 பாகிஸ்தானில் கொத்தடிமை தொழிலாளர்களாக உள்ள 17 லட்சம் பேரில் 7 லட்சம் பேர் குழந்தை தொழிலாளர்களாக இருக்கிறார்கள். குழந்தைகள் இதிலிருந்து மீட்கப்பட ஜெபிப்போம்.

6 பள்ளிக்கு செல்லாமல் கொத்தடிமைகளாக இருக்கும் சிறுபிள்ளைகள் பள்ளிகளுக்குச் சென்று படிக்க வேண்டிய வாய்ப்புகள் உருவாக்கப்பட ஜெபிப்போம்.

7 கொத்தடிமை தொழிலாளர்கள் முறை முற்றிலும் நம் தேசத்தை விட்டு அகற்றப்பட ஜெபிப்போம்.











8 கொத்தடிமை தொழில்களிலிருந்து மீட்கப்பட்டு, தொழிலாளர்களுக்கு மாற்று தொழில்கள் கொடுக்க அரசு ஆவன செய்ய ஜெபிப்போம்.

9 பெற்றோர்களுக்குள் ஏற்படும் பிரச்சனைகளினால் உங்களில் 20% குழந்தைகள் மனநிலை பாதிக்கப்படுகிறார்கள். இந்த நிலை மாற ஜெபிப்போம்.

10 தந்தையின் குடிப்பழக்கத்தினால் உலகளவில் 2.7% பேர் படிப்பை பாதியில் நிறுத்தியுள்ளனர். படிப்பை தொடர சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுக்க ஜெபிப்போம்.

11 பெற்றோரை இழந்ததால் 6.5% குழந்தைகள் சிறுவயதிலேயே கூலித் தொழிலாளர்களாக மாறியுள்ளனர். சிறுபிள்ளைகளுக்கு தகுந்த உதவிகள் கிடைக்கப்பட ஜெபிப்போம்.

12 குடும்பத்தில் வறுமை காரணமாக உலகளவில் 4.2% குழந்தைகள் அடிமைகளாக விற்கப்படுகின்றனர். குடும்பங்களில் உள்ள வறுமைகள் மாற ஜெபிப்போம்.

13 தேசத்தில் ஆங்காங்கே தொடர்ந்து நடக்கிற காட்டுத் தீ, வெள்ளம் நிலச்சரிவு, விபத்து, பட்டினிச்சாவினால் பாதிக்கப்படுகிறார்கள். நம் தேசத்தில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்கப்பட ஜெபிப்போம்.

14 மழைக்காலம் துவங்கி விட்டதால் கால்வாய்கள், ஏரிகள், தூர் வாரப்பட்டு பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

ஜெபம்: எஸ்தர்

**15** பள்ளிக் கட்டிடங்களை அதிகாரிகள் ஆய்வு செய்து, பராமரிக்கப்படவும், விபத்துகள் தடுக்கப்படவும் ஜெபிப்போம்.

**16** இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபடவும், எரிபொருள் மற்றும் உணவு பொருட்கள் தட்டுப்பாடின்றி கிடைக்கப்பெறவும் ஜெபிப்போம்.

**17** இலங்கைக்கு நிவாரணப் பொருட்கள் கொடுத்து அத்தேசத்தை அழிவிலிருந்து மீட்க தேசங்கள் முன்வர ஜெபிப்போம்.

**18** உலகளவில் 45 கோடி பேர் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள். மனநல பாதிப்பிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**19** மனநலம் பாதிப்புகள் ஏற்படாமல் தடுக்கப்பட, இளைஞர்கள் அவர்கள் சந்திக்கும் சவால்களை எதிர்கொள்ள மனதைரியமும், தெளிவும் உண்டாக ஜெபிப்போம்.

**20** மனநல பிரச்சனைகளுக் குட்பட்டால் அதற்கான தீர்வுகள் எடுக்கவும், மக்களிடையே விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவும் ஜெபிப்போம்.

**21** மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனநல மருத்துவர்கள், உதவியாளர்கள், சமூக சேவகர்கள் அர்ப்பணிப்போடு சேவை செய்யவும், பாதுகாப்பு கொடுக்கவும் ஜெபிப்போம்.

**22** மனநிலை பாதிக்கப்பட்டோரை ஆதரித்து, அன்போடு பராமரிக்க தேவன் அவர்கள் குடும்பத்தாருக்கு பொறுமையை கொடுக்க ஜெபிப்போம்.











**23** மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் முறையான சிகிச்சைப் பெறவும், சீக்கிரம் சுகம் பெற்று தங்களுடைய பணிகளைத் தாங்களே செய்யும்படியான சுகத்தைக் கொடுக்க ஜெபிப்போம்.

**24** கடைசிக் காலத்தில் கள்ளத்தீர்க்கதரிசிகள் எழும்பாதபடி, விசுவாசிகள் விழுந்து போகாதபடி ஜெபிப்போம்.

**25** தேசங்களில் ஊழியர்களுக்கு விரோதமாக எழும்புகின்ற எல்லாவித போராட்டங்களும் நிர்மூலமாகும்படி ஜெபிப்போம்.

**26** ஒவ்வொரு ஊழியர்களும் ஆத்தும பாரத்தோடும், தாகத்தோடும், வாஞ்சையோடும் கர்த்தருக்கு ஊழியம் செய்ய ஜெபிப்போம்.

**27** ஒவ்வொரு ஊழியர்களும் ஆவியின் கனிகளாலும், வரங்களினாலும் நிரப்பப்பட ஜெபிப்போம்.

**28** ஆதித்திருச்சபையைப் போல சபைகள் விசுவாசத்தில் வளரவும், கர்த்தருடைய வசனம் விருத்தியடையவும் ஜெபிப்போம்.

**29** திருச்சபைகளில் ஒருமனதின் ஆவி ஊற்றப்படவும், ஜெபிக்கிற சபைகளாக மாறவும் ஜெபிப்போம்.

**30** ஆதித்திருச்சபை போல அற்புத அடையாளங்கள் சபைகளில், தேசங்களில் நடைபெற ஜெபிப்போம்.

**31** எழுப்புதலின் அக்கினி சபைகளில் ஊற்றப்படவும், வாலிபர்களை, சிறுவர்களை தேவன் வல்லமையாக பயன்படுத்தவும் ஜெபிப்போம்.

# எழுப்புதலை பற்ற வைப்போர் முகாம்

## 2022 தமிழ்நாடு - Batch -3










கர்த்தரின் பெரிதான கிருபையால் கடந்த ஜூன் மாதம் 21,22,23 ஆகிய தேதிகளில் தமிழ்நாடு வாலிபர்களுக்கென்று எழுப்புதலை பற்ற வைப்போர் முகாம் - 2022 (Batch-3) தேவனுடைய கூடாரத்தில் வைத்து நடைபெற்றது. இதில் தேவ ஊழியர்கள் சகோ. மோகன் சி. லாசரஸ், சகோ வின்செண்ட் செல்வகுமார் அவர்களும் எழுப்புதலை குறித்த தரிசனத்தையும், எழுப்புதலில் வாலிபர்களின் பங்கு எவ்வளவு முக்கியம் என்பதையும் தெளிவாக எடுத்துரைத்தனர். தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களிலிருந்து சுமார் 2075 வாலிப சகோதர சகோதரிகள் கலந்துகொண்டு எழுப்புதலைக் குறித்த தரிசனத்தையும், பாரத்தையும் பெற்றுக் கொண்டு, தாங்கள் படிக்கும் பள்ளி மற்றும் கல்லூரிகளிலும், தாங்கள் வசிக்கும் பட்டணங்களிலும் எழுப்புதலை பரவ செய்வோம் என்று தீர்மானம் எடுத்து சென்றனர். தேவன் 7 விதமான சந்ததியை எழுப்புவேன் என்று சொன்ன வாக்குத்தத்தத்தின் படி தேசமெங்கும் வாலிப சந்ததியை எழுப்பி வருகிறார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!












REVIVAL
IGNITERS














வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

## EVERY 1ST SUNDAY

**(7TH AUGUST)**

**VELLORE (3 PM)**
Gethsamane Prayer Center, Ajantha Mahal, No.3,6th West Cross Road, Gandhi Nagar.
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center, No:62 2nd Floor, Benny Kumaran Main Road.
9442082200

**TIRUPATI (3PM)**
Old Community Hall, West Church.
9985033401 | 9442885315

**TUTICORIN (3PM - 5:30 PM)**
Gethsemane Prayer Center, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road, Muniasamypuram, (Land mark : South Police Station to Kamaraj college Road)
9442885315

**SANKARANKOIL (2:30-5)**
Gethsemane Prayer CenterSekinah Mahal Mullai Nagar
9750955548 / 8344949555

## EVERY 2ND SATURDAY

**(13TH AUGUST)**

**MADURAI (4:30 - 6:30PM)**
Gethsamane Prayer Centre 2/56, Upstairs, 1st Street, Main Road, Subramaniya Puram.
9750955548 | 0452-2677300

## EVERY 2ND SUNDAY

**(14TH AUGUST)**

**AMBUR (3PM - 6PM)**
Concordia Hr.Sec.School, Opp Rly. Station.
9597927799 | 9442885315

**THANJAVUR (3:00PM)**
Gethsemane Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, M.C.Road.
9444381971 | 9488475315

**KOVILPATTI (3PM – 5.30PM)**
St. Paul's Matriculation School, Kovilpatti.
9677858766 | 9787322334

**ALANGULAM ( 2:30PM)**
P.M.V. Packiyavathy Building R.A. Nursing Institute SCV Computers (top floor) Main Road, Alangulam, Near Union Office Opposite.
9965377427 | 9750955548

**THENI (2.30PM - 5 PM)**
Gethsamane Prayer Center, No.203, Madurai Road, (opp Anantham Silk) Dr. Kamaraj Hospital, 1st Floor.
9750955548 | 9976766422

**SURANDAI (2.30PM)**
Jawarhalal Middle School, Surandai.
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
Getsamane prayer Center
9677858766 / 9442906567

**SATHANKULAM (3-5:30PM)**
Hendry Matric Higher Secondary School
Mela Sathankulam
Ct: 9442885315

## EVERY 3RD SUNDAY

**(21ST AUGUST)**

**TIRUNELVELI (2:30 PM)**
Gethsamane Prayer Center Shah Complex No: 43/R4, Rajendra Nagar Trivandrum Road.
9750955548 | 9488212915

**COIMBATORE (4PM)**
Gethsamane Prayer Center,
No:90, 1st, Floor Arts College Rd.,
Near Charan Tower, Coimbatore.
0422 - 2309040 | 8903405315

**TRICHY (3PM)**
Gethsamane Prayer Center
22A, Ist Floor, Thennur High Rd.,
Near KMC Bus Stop, Thennur,
9488475315

**JEBAMALAI (2PM)**
Kadaiyam (via),
Keelamathapuram,
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3.30PM)**
VGP Victory House, Mount Road.
9488475315

**NALUMAVADI (3-5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**THIRUVARUR (3:30 PM)**
Gethsamane Prayer Center, 1A/25B, Bypass Road (Opp Arasu Autos)
9976766322 | 7373374733

**RANIPET (3 - 6P.M.)**
Gethsemane Prayer Centre,
MBT Road, Navalpur
9500283179 | 9442885315

## EVERY 4TH SATURDAY
### (27TH AUGUST)

**PERAMBALUR (5PM - 8 PM)**
Gethsamane Prayer Centre
M K Complex 71,
Venkatesapuram Near Bank Of Baroda, Trichy Main Road.
9788788512

## EVERY 4TH SUNDAY
### (28TH AUGUST)

**THIRUVALLUR (3-5:30)**
Gethsemane Prayer Center
H S R Tower, 2nd Floor,
Near CSI Gowdi Church
9488475315

**KRISHNAGIRI (3PM-5PM)**
Gethsemane Prayer center,
Near Arun Hospital, Royakottai Road,
Ct: 9962085523 | 9524999711

## MUMBAI (5PM - 8PM)

1st sunday - Dharavi
2nd Sunday- Bhandup
3rd Sunday - Malad
9004882470

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்


சத்தியம் TV சனிக்கிழமை 6:30am
7am Youtube மற்றும் Comforter TV யிலும் பார்க்கலாம்
வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.
அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட
ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!
9750955547
Sathiyam TV YouTube Comforter DIGITAL CHANNEL

WE'RE GOING LIVE
REVIVAL IGNITERS
ON SUNDAY AUGUST 28TH,
TIME: 3 - 5PM
IGNITERS, MONTHLY YOUTH FELLOWSHIP IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON LAST SUNDAY OF EVERY MONTH



# மீடியாத்துறை எழுப்புதல்!

கடந்த பத்து ஆண்டுகளில் மீடியாத்துறை அசுர வளர்ச்சி கண்டுள்ளது. 138 கோடி மக்கள் தொகை கொண்ட இந்தியாவில் 89 சதவீதத்திற்கு மேலான குடும்பங்களில் தொலைத் தொடர்பு வசதிகள் பெருகியுள்ளன. 70 கோடிக்கும் அதிகமான பேர் இணைய இணைப்பைப் பெற்றுள்ளனர். ஏறக்குறைய 50 கோடிக்கும் அதிகமானோர் ஸ்மார்ட்போன்கள் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர். ஒருபக்கம் சாத்தான் மீடியாத்துறை மூலம் கோடிக்கணக்கான ஜனங்களை அடிமைப்படுத்தி வைத்து இருந்தாலும், கடைசி கால எழுப்புதலில் ஆண்டவர் மீடியாத்துறையைப் பயன்படுத்தி மாபெரும் எழுப்புதலை தேசங்களுக்குள் கொண்டு செல்கிறார். குறிப்பாக கடந்த லாக்டவுன் நாட்களில் பேஸ்புக், இன்ஸ்டாகிராம், youtube போன்ற சமூக வலைத்தளங்களை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகமானதால், ஊரடங்கு நாட்களில் உலகமே முடங்கிப்போன சூழ்நிலையில் சமூக வலைத்தளங்கள் மூலமாக புறப்பட்ட கர்த்தருடைய வார்த்தை, சோர்ந்து போயிருந்த கோடிக்கணக்கான ஜனங்களை பலப்படுத்தியது. ஆண்டவரை விட்டு தூரம் போன லட்சக்கணக்கான ஜனங்கள் மீண்டும் கர்த்தர் பக்கம் திரும்பியுள்ளனர். இந்தியா மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் ஆண்டவரின் வார்த்தை அனுப்பப்படுவதற்கு மீடியாத்துறையின் பங்கு பெருகியுள்ளது.




எனக்கன்பான வாலிபர்களே! "...பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது..." (மத். 4:17). ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சீக்கிரமாய் இந்த பூமியை நியாயம் தீர்க்க வரப்போகிறார். அவர் வருகைக்கு முன்பாக உலகம் முழுவதும் மாபெரும் எழுப்புதல் உண்டாகப் போகிறது. குறிப்பாக இந்த எழுப்புதல் இந்தியாவிலிருந்துதான் ஆரம்பிக்கப் போகிறது. எனவே இனியும் காலத்தை விரயம் செய்யாமல் உங்கள் கையில் இருக்கும் ஸ்மார்ட்போனில் உள்ள whatsapp, instagram, facebook, twitter போன்றவற்றை பயன்படுத்தி, ஆயிரக்கணக்கானோருக்கு நீங்கள் ஆண்டவரின் வார்த்தை மற்றும் சுவிசேஷ செய்திகளை அனுப்பி, அநேக ஆத்துமாக்களை கர்த்தர் பக்கம் திருப்பி எழுப்புதலில் பங்கு உள்ளவர்களாக மாறலாம் ●



சிறப்பு கட்டுரை: கிளாடிஸ்

# தேவனோடு

## இணைந்து செல்...!

கிறிஸ்துவுக்குள் எனக்கன்பான வாலிப தம்பி, தங்கையே! தேவனோடு மட்டும் இணைந்து நிற்கும் வாழ்வின் மேன்மையைக் குறித்து இக்கட்டுரையின் வாயிலாக நாம் ஆராயவிருக்கிறோம்.

மோசே இந்த உலகத்தை விட்டு கடந்து சென்ற அந்த தருணத்தில், யோசுவாவிடம்,''...நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை'' (யோசுவா 1:5) என்று வாக்குக் கொடுக்கிறார். சற்று நம்முடைய சிந்தனையை திரும்பி பார்ப்போமேயானால்; யோசுவா ஒரு வாலிபனாக, வாழ்வில் வழிகாட்டி இல்லாமல், தனித்து திக்கு அறியாமல், இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்தும் சுமையை தோளில் சுமந்து கொண்டு, தன் சொந்த காரியங்களை எவ்வாறு கையாள வேண்டும் என்று புரியாமல், மனதில் பயத்தோடும், குழப்பத்தோடும், பதட்டத் தோடும், திகைப்போடும், வேதனை யோடும், கேள்வி யோடும் நிற்கும் ஒரு காட்சியை நம்மால் காண முடியும். இவ்வாறு கடந்து செல்லும் வாழ்வின் வெவ்வேறு தருணங்களில் நாம் என்ன செய்கிறோம் என்று சிந்தித்து பார்த்துள்ளீர்களா?



யோசுவா என்ன செய்தான் தெரியுமா! தன்னைப் படைத்த தன் சிருஷ்டிகரை நோக்கிப் பார்த்தான். ''அவர்கள் அவரை (ஆண்டவரை) நோக்கிப்பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை'' (சங். 34:5) என்று வேதம் சொல்கிறது. தேவனுடைய துணை யோசுவாவோடு இருந்ததினால், யோசுவா தேவனைச் சார்ந்து கொண்டதினால், எரிகோக் கோட்டை விழுந்தது, ஜனங்கள் யோர்தானைக் கடந்து சென்றார்கள். சூரியன் கிபியோனில் ஸ்தம்பித்து நின்றது என இயற்கைக்கு மேற்பட்ட தேவனுடைய செய்கைகளை கண்கூடாகக் காண நேர்ந்தது.

### இது எவ்வாறு நடந்தது?

யோசுவா, இந்த உலகத்துக்கு ஒத்த வேஷம் தரிக்கவில்லை. எப்படியும் வாழ்வை வாழலாம் என்று வாழாமல், தேவனுடைய கற்பனைகளோடு இணைந்து வாழும் ஒரு வாழ்க்கை முறையை கடைப்பிடித்தான். தேவனை மிகவும் உத்தமத்தோடும், உண்மையோடும் பின்பற்றினான். தேவனை முன்வைத்து கீழ்ப்படிந்து, அவருடைய சத்தத்தைக் கேட்டதினால் ஆடுகளின் பின்னே சென்ற தாவீது இஸ்ரவேலின் அரசனானான், யோபு நற்சீரை பெற்றுக் கொண்டான், ரூத் வர்த்திக்கப்பட்டாள், நெகேமியா அலங்கத்தைக் கட்டி எழுப்பினான், பேதுரு வலை கிழிய மீன்களை பிடித்தான்.

நாம் வேதத்தில் காணும் ஒவ்வொரு பாத்திரங்களும் யோசுவாவை போல், தேவன் மீது ஆழ்ந்த விசுவாசம் வைத்திருப்பதை நாம் காண முடிகிறது. விசுவாசம் என்னும் ஆழமான நங்கூரம், தேவன் அண்டையில் நம்மை இழுத்து அணைக்கிறது. நாம் இந்த உலகத்தில் தனித்துக் காரியங்களை செய்ய நேரிட்டாலும், பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு இணைந்து செய்தால் நம்மால் மிகவும் காரியசித்தியுள்ளவர்களாய் திகழ முடியும்.

**இயேசுவானவர் இந்த உலகத்தில் வாழ்ந்த காலங்களில் பிதாவோடு இணைந்து, பிதாவாகிய தேவன் முன்குறித்திருந்த திட்டங்களை நிறைவேற்றினார். நாமும் கூட கிறிஸ்துவோடு இணைந்து, இந்த இம்மைக்குரிய காரியங்களை தவிர்த்து, தேவ இராஜ்யத்தைக் கட்டும் பினாமிகளாக மாற தேவன் நமக்கு கிருபை பாராட்ட ஜெபிப்போம், பிரயாசப்படுவோம், தேவ சித்தம் செய்ய கீழ்ப்படிவோம்!** ●

## தவறான நோக்கம்

இயேசுவோடு இருந்த சீஷர்கள் எல்லோரும் இயேசுவால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், அவர்களுக்குள் சின்ன சின்ன போட்டிப் பொறாமைகள் இருந்தாலும், அவர்கள் நோக்கம் தீமையானதாக இருந்ததில்லை. ஆனால் யூதாசைக் குறித்து அவன் திருடனாக இருந்தான் என்று வேதம் சொல்கிறது (யோவான் 12:6). யூதாஸ் இயேசுவோடு இருந்ததற்கு காரணம் பெயர், புகழ் மட்டுமல்லாமல், பணப்பையை கையாண்டது யூதாஸ் என்பது குறிப்பிடத்தக்கது. அவன் நோக்கமெல்லாம் பணத்தைக் குறித்தும், உலகத்தைக் குறித்தும் தான் இருந்தது. யூதாஸ்காரியோத்தும் சுவிசேஷம் அறிவித்தான், குணமாக்கினான், பிசாசுகளைத் துரத்தினான். ஆனாலும் அவன் நோக்கம் சரியில்லாததினால் பிசாசு அவனைப் பயன்படுத்திக் கொண்டான். நாமும் கூட அநேக ஊழியங்களை செய்யலாம். ஆனால் நம் நோக்கம் இயேசுவை மகிமைப்படுத்துவதற்காக இல்லாமல் சுயநலமாக இருக்குமானால் நம் முடிவு பரிதாபமாக இருக்கும்.



## பண ஆசை (பேராசை)

பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராக இருக்கிறது (1 தீமோ. 6:10) என்று வேதம் குறிப்பிடுகிறது. யூதாஸ்காரியோத் பணப்பையை வைத்திருந்த படியால், அவன் பணத்தின் மீது அதிக கவனத்தை செலுத்தினான். மரியாள் இயேசுவின் பாதத்தில் விலையேறப் பெற்ற நளதம் என்ற தைலத்தை ஊற்றி இயேசுவைக் கனப்படுத்தினாள். ஆனால் அந்நேரமும் யூதாசின் எண்ணம் முழுவதும் அந்த நளதத்தை விற்றால் எவ்வளவு பணம் கிடைக்கும் என்பதாகத்தான் இருந்தது. யூதாசுக்கு பண ஆசை தான் பெலவீனம் என்பதை பிசாசு அறிந்து,



# யூதாஸ்காரியோத் RED

இயேசுவைக் காட்டிக் கொடுக்க 30 வெள்ளிக் காசுகள் கொடுத்தாலே போதும் என்று யூதாசை விலை பேசினான். பிசாசு முழுவதும் அவனுக்குள் புகுந்து விட்டான். பிசாசு நம் பெலவீனங்களை அறிந்திருக்கிறவன். அவன் யாருக்கு எந்த வலையை விரிக்க வேண்டும் என்று தெரிந்து வைத்திருப்பான். நமக்கு ஒருவேளை யூதாசைப் போல பண ஆசை இல்லாமல் இருக்கும், ஆனால் வேறு பெலவீனம் இருக்கக் கூடும். அந்தப் பெலவீனப் பகுதியை சரி செய்துக் கொள்ள தவறுவோமானால், நம் வாழ்வில் பிசாசு கிரியை செய்ய நாமே கதவை திறந்து விட்டது போல் இருக்கும்.



# ALERT

நிகழ்வு: காலேப்



## மனந்திரும்பாத கடின இருதயம்

யூதாஸ்காரியோத், இயேசுவைக் காட்டிக் கொடுக்கப் போகிறான் என்று முன்னமே அறிந்திருந்தும் அவனை ஒன்றும் சொல்லவில்லை, அவன் மனந்திரும்ப இயேசு அவனுக்கு மூன்றரை ஆண்டுகள் கொடுத்தார். இயேசு பேசின அத்தனை உபதேசங்களையும், போதனைகளையும் அவன் கேட்டிருக்கக் கூடும் ஆனால் அதற்கு கீழ்ப்படிய மனதில்லாதிருந்தான். இயேசுவின் கடைசி மணி நேரங்களில் கூட அவன் மனந்திரும்ப வாய்ப்பு அவனுக்கு இருந்தது. ஆனால் மனந்திரும்பக் கூடாதபடி அவன் இருதயம் கடினப்பட்டிருந்தது. கடைசியில் அவன் பாவத்தை உணர்ந்தாலும், அவனுடைய மனசாட்சி, குற்றவுணர் வினால் பாதிக்கப்பட்டதின் நிமித்தம் தற்கொலை செய்து கொண்டான். இயேசு அவன் பாவத்தை மன்னிக்க முடியும் என்று கூட அறியாமல், அவன் தன் ஜீவனை விட்டான். நமக்கும் மனந்திரும்ப அநேக சந்தர்ப்பங்கள், வாய்ப்புகள் கிடைக்கும்போதே அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனென்றால் மீண்டும் மனந்திரும்ப ஒரு தருணம் கிடைக்குமா என்பது நிச்சயமில்லை.



எழுப்புதலுக்காக தெரிந்து கொள்ளப்பட்ட வாலிபர்களே! நாம் சிறுவயது முதலே கிறிஸ்தவர்களாக இருக்கலாம், தவறாமல் சபைக்கு செல்பவர்களாகக் கூட இருக்கலாம், ஆனால் இயேசுவுக்கும் நமக்கும் தனிப்பட்ட உறவு இல்லையென்றால், நம் முடிவும் யூதாசைப் போல் தான் இருக்கும். யூதாஸ் மூன்றரை ஆண்டுகள் இயேசுவோடு இருந்தாலும், அவன் இயேசுவை அறிந்திருக்கவில்லை. எனவே நம்முடைய வாழ்வில் நாம் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம், நாம் இயேசுவை பின்பற்றுவதற்கான நோக்கம் என்ன? என்பதை ஆராய்ந்து பார்த்து, நம்மை சரி செய்து கொள்வோமானால், நம்மை தேவன் எழுப்புதலில் வல்லமையாக பயன்படுத்த முடியும்!

**அடுத்த Red Alert பகுதியில் வேறொரு நபரைக் குறித்து தியானிப்போம்.**

# ஜெபிப்போம் ஜெயமெடுப்போம்!

## (மாதிரி ஜெபம் - இயேசுவின் ஜெபம்)

நிகழ்வு: கெத்சி கிளார்வின்

நாம் கற்றுக்கொள்ளுகிற ஒவ்வொரு காரியமும் எப்பொழுதும் சரியான நபரிடத்தில் இருக்குமானால், நாம் செய்யும் காரியமும் சரியாகவே இருக்கும். ஆகவே தான், ''நாம் இந்த உலகத்தில் எப்படி வாழ வேண்டும்?'' என்று நமக்கு கற்றுக்கொடுக்க நம்மை உண்டாக்கியவர் ஒரு சாதாரண மனிதனாக 'இயேசு' என்ற பெயரில் இந்த உலகத்தில் வாழ்ந்து நமக்கு மாதிரியைக் காண்பித்து, ''...என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்;...'' (மத். 11:29) என்று போதித்தார்.

ஜெபிப்பதின் முக்கியத்துவத்தினை தொடர்ந்து கற்றுக்கொண்டிருக்கும் நாம், இம்மாதத்தில் இயேசுவின் ஜெப வாழ்விலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய சில காரியங்களைப் பார்ப்போம், வாருங்கள்!

### இயேசுவின் அதிகாலை ஜெபம்!

''அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து, புறப்பட்டு, வனாந்திரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம் பண்ணினார்'' (மாற்கு 1:35).

இயேசுவை சுற்றி எப்பொழுதும் 12 சீஷர்கள் இருந்தார்கள். அவரோடே ஒன்றாக தங்கினார்கள்! ஒன்றாக சாப்பிட்டார்கள்! ஒன்றாகவே பிரயாணப் பட்டார்கள்!

தன்னுடைய 12 சீஷர்களும் தன்னோடு கூட இருக்கும்பொழுதும், இயேசு அதிகாலையில் எழும்பி தனியாக ஜெபிக்கச் சென்றார். இப்படியே ஒவ்வொரு நாளும் தனது நாளை துவக்கினார்.

வாலிபர்களே! நீங்கள் எப்படி ஒரு நாளைத் துவங்குகிறீர்கள்? தினமும் எத்தனை மணிக்கு எழும்பி ஜெபம் செய்கிறீர்கள்? என்று உங்களையே சற்று நிதானித்துப் பாருங்கள்!

### இயேசுவின் தனிமையான ஜெபம்!

''அவர் ஜனங்களை அனுப்பிவிட்ட பின்பு, தனித்து ஜெபம் பண்ண ஒரு மலையின் மேல் ஏறி, சாயங்காலமான போது அங்கே தனிமையாயிருந்தார்'' (மத். 14:23)



இயேசு தன் சீஷர்களை அக்கரைக்கு அனுப்பி விட்டு, ஒரு மலையில் ஏறி, தனிமையாக இருந்து பிதாவினிடத்தில் ஜெபம் செய்தார்.

ஒருவேளை, நீங்கள் படித்துக் கொண்டிருக்கலாம்! அல்லது ஏதேனும் வேலை செய்துக்கொண்டிருக்கலாம்! உங்களது அனுதின வேலைகளை முடித்துவிட்டு சாயங்காலத்தில் ஒரு மணி நேரமாவது கர்த்தருடைய சமூகத்திற்கு சென்று, அவருடைய பாதப்படியில் காத்திருக்கப் பழகுங்கள்.

காலையில் மட்டுமல்ல, மாலை வேளைகளிலும் ஜெபிப்பது முக்கியம் என்பதையே இயேசு நமக்கு மாதிரியாக காண்பித்திருக்கிறார்.

### இயேசுவின் முழு இரவு ஜெபம்!

''...அவர் ஜெபம்பண்ணும்படியாக ஒரு மலையின்மேல் ஏறி, இரா முழுவதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார்'' (லூக்கா 6:12)

# தனிமை Loneliness

சிறப்பு கட்டுரை: ரவி

என் அன்பு வாலிப சகோதர, சகோதரிகளே, நாம் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தலைப்பில் ஆராய்ந்து வருகிறோம். இந்த மாதம் 'தனிமை' என்ற தலைப்பில் ஆராயவிருக்கிறோம். நீங்கள் தனிமையை அனுபவித்ததுண்டா? ஏறக்குறைய நாம் அனைவரும் வாழ்க்கையில் ஏதோ ஒரு சூழ்நிலையில் தனிமையாய் இருந்திருப்போம். குடும்பமோ, நண்பர்களோ இல்லாமல் தனியாய் இருப்பது மாத்திரம் தனிமையல்ல. சில நேரங்களில் இவர்கள் அனைவரும் நம்மைச் சூழ்ந்து இருந்தாலும், நாம் தனிமையாக இருக்கிறோம் என்று உணரக்கூடும். தனிமை மிகவும் ஆபத்தானது. ஆதியாகமத்தில் தேவன் ''மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல'' என்றார். ஆம் நண்பர்களே, நாம் தனிமையாக வாழ படைக்கப்படவில்லை. சற்று சிந்தித்துப் பாருங்கள்! நீங்கள் மாத்திரம் தனிமையாக இப்பூமியில் இருக்கும் ஓர் சூழ்நிலை ஏற்பட்டால், அது எவ்வளவு கொடுமையானதாக இருக்கும். கொரோனா காலத்தில், ஊரடங்கு உத்தரவு அமலில் இருந்த நாட்களில், பள்ளி கல்லூரி நண்பர்களைப் பார்க்க முடியாமல் எத்தனை அவதிக்குள்ளானோம் என்பது உங்களுக்கு நினைவிருக்கும் என்று நினைக்கிறேன்.

என்ன தான் சொந்தங்கள், பந்தங்கள் என்று நிறைய பேர் நமக்கு இருந்தாலும், எல்லாரும் எல்லா நேரமும் நம்மோடு இருக்க முடியாது. இப்பூலோக வாழ்க்கை நிரந்தரமல்ல. நாம் அனைவரும் ஒருவரை ஒருவர் விட்டு பிரியும் தருணங்கள் வரும். ஆனால் நண்பர்களே, நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை, மரணத்தை ஜெயித்து, நம்மை விட்டு ஒருபோதும் பிரியாத நல்ல தேவன் இயேசு நமக்கு இருக்கிறார். ''...நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை...'' (எபி. 13:5) என்று வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆம், சில நேரங்களில் நாம் ஒரு தவறும் செய்யாமல்கூட மனிதர்களால் தனிமைப்படுத்தப்படுவோம். வேதத்தில், தாவீது இராஜாவோடு அன்பாக இருந்தவர்களே அவனுக்கு விரோதமாக திரும்பி அவனைக் கொல்லும்படி நினைத்தார்கள். அச்சூழலில், தாவீது தன்னைத்தான் கர்த்தருக்குள் திடப்படுத்திக்கொண்டான் என்று வேதம் சொல்கிறது. இவ்வளவு ஏன்! நம் கர்த்தராகிய இயேசுவைப் பாருங்கள், நன்மை மட்டும் செய்து, அன்பை மாத்திரம் காட்டிய அவர் தனிமையாக சிலுவையில் மரிக்க நேர்ந்தது. மரணத் தருவாயில், ''என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்'' என்று தேவனை நோக்கி அவர் அலறும் குரல் எத்தனைப் பரிதாபம். ஆனால் நண்பர்களே, அவர் தனிமையாக மரித்தால்தான் நமக்கு பாவமன்னிப்பாகிய மீட்பு கிடைக்கும். பிதாவாகிய தேவன் நம் பாவங்களை இயேசுவின்மேல் வைத்தால்தான், நாம் அவரோடு சேர வாசல் திறக்கும்.

என் அன்பு வாலிபர்களே, தனிமையாக உணருகிறீர்களா? இயேசு உங்களை அழைக்கிறார், நேசிக்கிறார், உங்களோடு எப்பொழுதும் இருக்கிறார். ''வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்;...'' (மத். 11:28) என்று சொன்னவர், உங்களையும் தன்னிடம் அழைக்கிறார். நீங்கள் வருவீர்களா? வந்து அவர் அன்பை ருசித்து, உங்கள் தனிமையை மறந்து மகிழ்வீர்களா? கர்த்தராகிய இயேசு என்றும் உங்களோடு இருக்கிறார்.

# செய்திகள்!

## லடாக் எல்லைக்கு அருகே பறந்து அச்சுறுத்திய சீன போர் விமானம்!

லடாக்கில் அசல் எல்லை கட்டுப்பாடு கோட்டுக்கு மிக அருகில் பறந்து வந்து அச்சுறுத்திய சீன போர் விமானத்தை சுட்டு வீழ்த்த இந்திய விமானப்படை தயாரானது பற்றி பரபரப்பு தகவல் வெளியாகி இருந்தது.

கிழக்கு லடாக் பகுதிகளில் இந்திய எல்லை பகுதிகளை ஆக்கிரமிக்க சீன ராணுவம் தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது. கல்வான் பள்ளத்தாக்கில் கடந்த 2020ல் நடந்த இதுபோன்ற முயற்சியை தடுத்த, இந்திய வீரர்கள் மீது சீன ராணுவம் தாக்குதல் நடத்தியதில் 20 வீரர்கள் வீர மரணம் அடைந்தனர். இந்திய வீரர்கள் நடத்திய பதில் தாக்குதலில் 40க்கும் மேற்பட்ட சீன வீரர்கள் கொல்லப்பட்டனர். இதனால் இருநாடுகளுக்கும் இடையே போர் மூளும் அபாயம் ஏற்பட்டது. பின்னர் இருநாட்டு அரசுகளும் தூதரக ரீதியாகவும், ராணுவமட்டத்திலும் நடத்தி வரும் பேச்சுவார்த்தையின் காரணமாக, இந்த மோதல் தவிர்க்கப்பட்டு வருகிறது.

இருப்பினும், லடாக் எல்லை முழுவதும் சீன ராணுவம் குவிக்கப்பட்டு இருக்கிறது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், இந்திய வீரர்களும் ஆயிரக்கணக்கில் குவிக்கப்பட்டு, கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது.

அதே நேரம், இந்தியாவுக்கு ஆத்திரமூட்டும் வகையில் லடாக்கில் ஏற்கனவே ஆக்கிரமித்த ஹோடன், கர்குன்சா ஆகிய இடங்களில் சீன ராணுவம் மிகப்பெரிய விமானப்படை தளங்களை அமைத்துள்ளது. இங்கு போர் விமானங்களும், ஆளில்லா போர் விமானங்களும் குவிக்கப்பட்டு உள்ளன. மேலும் இந்திய ஏவுகணைகள், விமானங்களை சுட்டு வீழ்த்துவதற்காக ரஷ்யாவிடம் இருந்து வாங்கிய எஸ்-400 ஏவுகணை தடுப்பு அமைப்பையும் சீனா அங்கு நிறுத்தி வைத்துள்ளது. இதற்கு போட்டியாக, இந்தியாவும் எல்லையில் எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்தும் வகையில் விமானப்படையை தயார் நிலையில் வைத்திருக்கிறது.

இந்நிலையில், கடந்த மாதம் இறுதி வாரத்தில் ஒரு நாள், அதிகாலை 4 மணியளவில் லடாக்கில் அசல் எல்லை கட்டுப்பாட்டு கோட்டுக்கு மிக அருகில் சீன போர் விமானம் பறந்து வந்து அச்சுறுத்தல் ஏற்படுத்திய தகவல் தற்போது வெளியாகி இருக்கிறது. எல்லையில் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள இந்திய வீரர்கள் அந்த விமானத்தை கண்டதும், அப்பகுதியில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள ரேடார்கள் மூலம் அதை கண்காணித்தனர். மேலும் விமானப்படையின் ரேடாரிலும் சீன போர் விமானம் சிக்கியது. இதுபோன்ற தருணங்களில், இந்திய எல்லைக்குள் சீன போர் விமானங்கள் அத்துமீறி நுழையும் பட்சத்தில் முதலில் எச்சரிக்கை கொடுக்கவும், பிறகு தாக்குதல் நடத்தவும் இந்திய விமானப்படைக்கு நிரந்தர உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது.

அதன் அடிப்படையில், முதலில் அந்த விமானத்துக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. பின்னர் தாக்குதலுக்கு தேவையான முன்னேற்பாடுகளில் விமானப்படை ஈடுபட்டது. இதன் காரணமாக, அந்த அதிகாலையில் பெரும் பரபரப்பு நிலவி இருக்கிறது. பின்னர் சீன போர் விமானம் அப்பகுதியில் இருந்து திரும்பிச் சென்றது.

அந்த விமானம் எல்லைக்கு அருகில் வந்து அத்துமீறிய சம்பவத்துக்கு சீன அரசிடம் இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது - *தினகரன், 10 ஜூலை 2022.*

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

JESUS REDEEMS MINISTRIES

# 50 கோடி சுவிசேஷம் 5 கோடி ஆதாயம்

VISION 2030

## ஜெபக்குறிப்புகள்

50 கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கும் தரிசனத்தை பெற்றிருக்கும் சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள், தேவ சித்தத்தை பரிபூரணமாக செய்து முடிக்க வேண்டிய கிருபையை தேவன் கொடுக்க ஜெபிப்போம்.

இந்த திட்டத்தை 2030ம் ஆண்டிற்குள் நிறைவேற்றி முடிக்க வேண்டிய விசேஷித்த ஞானம், அபிஷேகம், பெலன் மற்றும் சுகம் அருளப்படவும், தேவன் கொடுத்த அனைத்து வாக்குத்தத்தங்கள் நிறைவேற்றப்படவும், சகோதரருக்கு விரோதமாக எழும்பும் சத்துருவின் வல்லமைகள் அழிக்கப்படவும் ஜெபிப்போம்.

10 கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவித்து, 1 கோடி ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த பொறுபெடுத்திருக்கும் வாலிபர் ஊழியத்தின் முழுநேர ஊழியர்கள், இந்தியா முழுவதும் இருக்கும் REVIVAL IGNITERS, மற்றும் தன்னார்வ ஊழியர்களுக்கு, இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கான அபிஷேகமும், கிருபையும், வல்லமையும், ஆத்தும பாரமும் உண்டாக ஜெபிப்போம்.

**ஒரு கோடி** ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதற்கு **ஒரு கோடி மணி நேரம்** ஜெபிக்க புதிய ஜெப திட்டங்களையும், ஜெப வீரர்களையும், ஜாமக்காரர்களையும் தேவன் எழுப்பி தர ஜெபிப்போம்.

எஸ்தர் 8ஆம் அதிகாரம் 10ம் வசனத்தின்படி, ஒரு கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷத்தை தீவிரமாக கொண்டு சென்று, நற்செய்தி அறிவிக்கும் அஞ்சர்காரர்களை தேவன் எழுப்பவும், அவர்கள் தேசத்திற்குள் அனுப்பப்படவும் ஜெபிப்போம்.

ஊடகத்தின் (தொலைக்காட்சி, சமூக வலைத்தளம் ) மூலம் சுவிசேஷத்தை தீவிரமாக எடுத்து செல்லவும், புதிய நிகழ்ச்சிகளை தயாரிக்கவும், தேவன் புதிய திட்டங்களை கொடுக்கும்படி ஜெபிப்போம்.

**இயேசு விடுவிக்கிறார்**
**வாலிபர் ஊழியம்**

**10 கோடி**
**வாலிபர்களுக்கு சுவிசேஷம்**

**1 கோடி**
**வாலிபர்களை இரட்சிப்புக்குள் வழி நடத்த**
**15 மணி நேர ஜெபத்திட்டம்**

**தினமும் இந்த தரிசனத்திற்காக**
**30 நிமிடம் ஜெபிப்பேன்**

DAY - 1 DAY - 2 DAY - 3 DAY - 4
DAY - 5 DAY - 6 DAY - 7 DAY - 8
DAY - 9 DAY - 10 DAY - 11 DAY - 12
DAY - 13 DAY - 14 DAY - 15 DAY - 16
DAY - 17 DAY - 18 DAY - 19 DAY - 20
DAY - 21 DAY - 22 DAY - 23 DAY - 24
DAY - 25 DAY - 26 DAY - 27 DAY - 28
DAY - 29 DAY - 30

Name..........................................................

Mobile........................................................

Place..........................................................

நீங்கள் ஜெபித்தவுடன் எங்களுக்கு photo எடுத்து 97509 55547 என்ற whatsapp நம்பருக்கு அனுப்பவும்

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847.
Postal Registration No: TTN/26/2020-2022.
Date of Publication: 25 - 07 - 2022.
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO- 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2020-2022.

இயேசு விடுவிக்கிறார் ஊழியங்கள் நடத்தும்

# வாலிபர் கொண்டாட்டம்

**15 AUGUST**

திங்கள்கிழமை

காலை 9 மணி முதல்

மதியம் 2:30 மணி வரை

**வாலிபர்களே! உங்கள் நண்பர்களோடு**
**இக்கூடுகையில் பங்குபெறுங்கள்!**
**உடனே பதிவு செய்யுங்கள்!**

Free registration: **youth.jesusredeems.com**

**அனுமதி இலவசம்!**

இடம் : தேவனுடைய கூடாரம், நாலுமாவடி



செய்தியும் ஜெபமும்

சகோ. மோகன் சி லாசரஸ்

# MOUNT SINAI 2022

## ஒரு நாள் வாலிபர் உபவாச கூடுகை

வாலிபர்களே! தேசத்திற்க்காய் ஜெபிக்கவும் அழிந்து கொண்டிருக்கும்
வாலிபர்களுக்காக திறப்பிலே நின்று ஜெபிக்கவும் திரண்டு வாரீர்!

அக்டோபர் 24 திங்கள் கிழமை
( தீபாவளி தினத்தன்று )
காலை 9 முதல் மாலை 4 மணி வரை

நாலுமாவடி, ஜெபமலை,
வேலூர், கோவை, சென்னை
மற்றும் பாண்டிச்சேரியில்

**தொடர்புக்கு: 9750955547 / 9442885315**